Registered as a news paper.

பக்கங்கள்: பன்னிரண்டு

விலை ரூபா 7.00

# நமது ஈழநாடு


தமிழர் தாயகத்தின் முன்னோடி நாளிதழ்




மலர்: 03 திருவள்ளுவர் ஆண்டு: 2036 பங்குனி – 25 ஆம் நாள் ஹிஜ்ரி 1428 ஸபர் 27 (07.04.2005) வியாழக்கிழமை இதழ்:190

# மானுட விடிவிற்காக அயராது உழைத்த மகத்தான ஆன்மீகத் தலைவர் பாப்பரசர்!

## இரங்கல் செய்தியில் தேசியத் தலைவர்





(கிளிநொச்சி)

பரிசுத்த பாப்பரசர் இரண்டாம் அருளப்பர் சின்னப்பர் மறைவுக்குப தமிழீழத் தேசியத் தலைவர் வே.பிரபாகரன் இரங்கல்தெரிவித்துள்ளார்.

தமிமீழ தேசியத் தலைவர் நேற்று வெளியிட்ட இரங்கல் செய்தியில் குறிப்பிடப்பட்டுள்ளதாவது –

மானுடத்தின் விடிவிற்காக அயராது உளைத்த ஒரு மகத்தான ஆன்மீகத் தலைவரை உலகம் இழந்து விட்டது. உலக சமாதானத்திற்கும் தேசங்கள் மத்தியிலான சகவாழ்விற்கும் சகல மதத்தவர்களும் ஒத்திசைவான நல்லுறவிற்கும் புனித பாப்பரசர் ஆற்றிய பணி அற்புதமானது. அனைவராலும் போற்றப்படுவது. உலகத்தின் உன்னதமான ஆன்மீகத் தலைவர் [illegible] ரீதியில் வறுமைப்பட்ட மக்களதும் ஒடுக்கப்பட்ட இனங்களினதும் விடிவிற்காக அவர் அரும் பணியாற்றினார். அன்பு, காருண்யம், சகோதரத்துவ பண்பு போன்ற சீலங்களை அவர் பரப்புரை செய்தார்.

சுதந்திரம், விடுதலை, சமத்துவம் போன்ற உயரிய மனித விழுமியங்களில்நம்பிக்கைகொண்ட அனைத்து மனிதப் பிறவிகளும் பாப்பரசரின் உன்னதமான வாழ்க்கையையும் அவரது உயரிய சிந்தனைகளையும் என்றும் தமது நெஞ்சில் நிறுத்தி அவரை கௌரவிப்பார்கள். தமிழ் மக்களின் சார்பாக எனது ஆழ்ந்த துயரையும்கவலையையும்தெரிவிக்கின்றேன் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## 'சுனாமி'யின் விளைவு

# இலங்கையின் வறுமை நிலை 25 வீதத்தால் உயரும் ஆபத்து!

(கொழும்பு)

கடந்த டிசம்பர் மாதம் ஏற்பட்ட சுனாமி அனர்த்தத்தால் - இலங்கையில் 2 லட்சத்து 87 ஆயிரம் மக்கள் மிகவும் வறுமை நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளதாகவும் - இதனால் தேசிய வறுமை அளவு 1.4 வீதத்திலிருந்து 26.6 வீதமாக அதிகரிக்குமெனவும் ஆசிய அபிவிருத்தி வங்கி எச்சரித்துள்ளது.

சுனாமிக்குப் பின்னரான நிலை குறித்து ஆசிய அபிவிருத்தி வங்கி நேற்று வெளியிட்ட தனது வருடாந்த அறிக்கையில் மேலும் தெரிவித்துள்ளதாவது -

சுனாமி பாதிப்பிலிருந்து இந்தியா, மாலைதீவு மற்றும் (12 ஆம் பக்கம் பார்க்க)

# அடுத்த கடற்படைத் தளபதி விவகாரத்தால் சந்திரிகா - சந்தகிரி இடையே முரண்பாடு!

(கொழும்பு)

கடற்படைத் தளபதி வைஸ் அட்மிரல் தயா சந்தகிரியின் பதவிக் காலம் எதிர்வரும் செப்ரெம்பர் மாதத்துடன் நிறைவடைவதால், அடுத்த கடற்படைத் தளபதியாக யாரை நியமிப்பது என்ற விடயத்தில் இழுபறி நிலை தோன்றியிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

தற்போதைய கடற்படைத் தளபதிக்கு அடுத்த நிலையிலிருக்கும் இரு தளபதிகளில், புதிய தளபதியாக யாரை நியமிப்பது என்ற விடயத்தில், ஜனாதிபதி சந்திரிகாவுக்கும், கடற்படைத் தளபதி தயா சந்தகிரிக்கும் இடையில் கருத்து வேறுபாடுகள் தோன்றியிருப்பதாகவும் தகவல்கள் வெளியாகியுள்ளன.

தற்போதைய கடற்படைத் தளபதி வைஸ் அட்மிரல் தயா சந்தகிரிக்கு- அடுத்த நிலையில் இருக்கும் தளபதியான வைஸ் அட்மிரல் மொகான் ஜயவிக்கிரம மற்றும் மூன்றாவது நிலையிலிருக்கும் தளபதியான வசந்த கருணாகொட ஆகியோரில், அடுத்த கடற்படைத் தளபதியாக யாரைத் தெரிவு செய்வது என்ற விடயத்திலேயே முரண்பாடுகள் தோன்றியிருப்பதாகத் தெரியவருகிறது.

தற்போதைய இரண்டாவது நிலைக் கடற்படைத் தளபதியான வைஸ் அட்மிரல் மொகான் ஜயவிக்கிரமவை, தனக்குப் பின்னர் புதிய தளபதியாக நியமிக்கவேண்டும் என்று, தற்போதைய தளபதி தயா சந்தகிரி விருப்பம் கொண்டுள்ளதாகவும், எனினும் மூன்றாவது

(12 ஆம் பக்கம் பார்க்க)



# நிழல்யுத்தத்தை நிறுத்தக்கோரி யாழ். நகரில் நேற்றுப் பேரணி!

(யாழ்ப்பாணம்)

ஊர் பொது அமைப்புக்கள் கண்டனப்

## விண்ணாணம் விநாசியர்



28.8 வீதமாக அதிகரிக்குமெனவும் ஆசிய தவு மற்றும் (12 ஆம் பக்கம் பார்க்க) ளன். (12 ஆம் பக்கம் பார்க்க)



# நிழல்யுத்தத்தை நிறுத்தக்கோரி யாழ். நகரில் நேற்றுப் பேரணி!

(யாழ்ப்பாணம்)

விடுதலைப் புலிகளுடனான சமாதானப் பேச்சுக்களை இலங்கை அரசாங்கம் மீண்டும் ஆரம்பிக்கவேண்டும் என்றும் விடுதலைப் புலிகள் மீதும் மக்கள் மீதும் தொடரும் நிழல் யுத்தத்தை உடன் நிறுத்தவேண்டும் என்றும் உயர் பாதுகாப்பு வலயத்தில் மீளக்குடியமர அனுமதிக்க வேண்டும் என்றும் கோரி நேற்று யாழ் நல்லூர் பொது அமைப்புக்கள் கண்டனப் பேரணி ஒன்றினை நடத்தின.

நேற்றுக்காலை 10 மணியளவில் நல்லூர் கந்தசுவாமி கோவில் முன்பாக ஒன்று கூடிய பெருமளவான மக்கள் பேரணியாகப்புறப்பட்டு - எமது குடியிருப்புகளும் பாடசாலைகளுமா முட்கம்பி வேலிக்குள், இலங்கை அரசே சமாதானப்பேச்சை உடன்

(12 ஆம் பக்கம் பார்க்க)

## விண்ணாணம் விநாசியர்



சுனாமி வந்தது முன்னே...!
வறுமை வந்தது பின்னே...!!

## க. பொ. த. சாதாரணதரப் பரீட்சையில்

# 3 ஆயிரத்து 477 மாணவர்கள் பத்து பாடங்களிலும் 'ஏ'சித்தி!

(கொழும்பு)

கடந்த வருடம் டிசம்பர் மாதம் நடைபெற்ற கல்விப் பொதுத்தராதர சாதாரணதரப் பரீட்சை முடிவுகள் நேற்று வெளியாகின.

நேற்று வெளியாகிய முடிவுகளின் படி பரீட்சைக்குத் தோற்றியவர்களில் ஒரு லட்சத்து 40 ஆயிரம் பேர் உயர் தர வகுப்புகளில் கல்வி கற்க வாய்ப்பைப் பெற்றனர். 3 ஆயிரத்து 477 பரீட்சார்த்திகள் தோற்றிய அனைத்துப் பாடங்களிலும் அதிவிசேட சித்தியைப் பெற்றுள்ளனர்.

கொழும்பு கோதமி பாலிகா வித்தியாலயத்தை சேர்ந்த தனுஜாகுமாரி விக்கிரமாராச்சி என்ற மாணவி அதி கூடிய புள்ளிகளைப் பெற்று தேசிய மட்டத்தில் முதலிடத்தை பெற்றுள்ளார். இரண்டாவது இடத்தை கொழும்பு நாலந்தா கல்லூரி மற்றும் றோயல் கல்லூரி மாணவர்கள் இருவர் பெற்றுள்ளனர்.

இம்முறை ஆங்கிலம், கணிதம்

(12 ஆம் பக்கம் பார்க்க)

## இராணுவ சீருடைகள் சுனாமி நிவாரணத்துடன்!

(கொழும்பு)

சுனாமி நிவாரணப் பொருட்களுடன் எடுத்துவரப்பட்ட 424 இராணுவச் சீருடைகள், ஜீன்ஸ்கள், 10 ஸ்ரெச்சர்கள் என்பனவற்றைக் கடற்படையினர் கண்டு பிடித்துள்ளனர்.

சுவிற்சர்லாந்திலிருந்து - சமூக சேவைகள் திணைக்களத்துக்கு முகவரியிடப்பட்டு அனுப்பப்பட்ட கொள்கலனிலேயே இவை மீட்கப்பட்டுள்ளன.

கொழும்புத் துறைமுகத்தில் சோதனையில் ஈடுபடுத்தப்பட்டிருக்கும் கடற்படையினரே இவற்றைக் கண்டுபிடித்துள்ளனர். இதனையடுத்து கடற்படையினரின் சோதனை நடவடிக்கைகள் துறைமுகப் பகுதியில் தீவிரமடைந்துள்ளன.

# பொலிஸ் கொன்ஸ்டபிள் ஒருவர் கல்முனையில் சுட்டுக் கொலை!

(அம்பாறை)

அம்பாறை மாவட்டத்திலுள்ள கல்மனைக்குடியில் சுனாமி நிவாரணப் பொருள் களஞ்சியத்துக்குப் பாதுகாப்பு வழங்கிக் கொண்டிருந்த பொலிஸ் கொன்ஸ்டபிள் ஒருவர் இனந் தெரியாத நபர்களினால் சுட்டுக் கொல்லப்பட்டார்.

நேற்று அதிகாலை 4.10 மணியளவில் இடம் பெற்ற இந்தத் தாக்குதல் சம்பவத்தில் பதுளை மாவட்டம் கந்தஹெட்டிய பொலிஸ் நிலையத்தைச் சேர்ந்த எச்.டி.எம்.லலித் என்ற றிசேவ் பொலிஸ் கொன்ஸ்டபிளே உயிரிழந்தவராவார்.

விசேட கடமைக்காக கல்முனைப் பொலிஸ் நிலையத்துடன் இணைக்கப்பட்டிருந்தார். இன்னொரு பொலிஸ் கொன்ஸ்டபிளுடன் கல்முனைக்குடி நகரசபைக் கட்டடத்தில் அமைந்திருந்த நிவாரணப் பொருள் களஞ்சியத்தில் பாதுகாப்பு கடமையில் ஈடுபட்டிருந்த போது அதிகாலை 4.10 மணியளவில் சுமார் எட்டுப் பேரடங்கிய குழுவினர் பொலிஸார் மீது துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டனர்.

முகமூடி அணிந்திருந்த ஆயுத பாணிகளில் இருவர் ரி - 56 ரகத் துப்பாக்கிகளை வைத்திருந்ததாகவும்

(12 ஆம் பக்கம் பார்க்க)





இலங்கையில் முன்னணி வகிக்கும் உள்ளூர் விமான சேவை...

ஒதுக்கீடுகளுக்கு அழையுங்கள் 021-2223891, 2226297, 077-2349999, 011-2372952-3, 011-2360290, 011-2360291

email: jaffna@expoavi.com, reservations@expoavi.com.

EXPOAIR

Your friend in the skies...

# கோப்பாய் ஆசிரிய கலாசாலையில் இன்றும் நாளையும் முத்தமிழ்விழா

(யாழ்ப்பாணம்)

கோப்பாய் ஆசிரியர் கலாசாலை முத்தமிழ் மன்றம் நடத்தும் முத்தமிழ் விழா இன்றும் நாளையும் கலாசாலை ரதிலட்சுமி மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

ஆரம்ப நாளான இன்றைய நிகழ்வுகள் முத்தமிழ் மன்றத்தின் துணைத் தலைவர் கு.உதயகுமார் தலைமையில் நடைபெறவுள்ளது. இந்த நிகழ்வில் யாழ். பல்கலைக்கழக தமிழ்த் துறைத் தலைவர் கலாநிதி சி.சிவலிங்கராசா பிரதம விருந்தினராக கலந்து கொள்வார்.

இரண்டாவது நாள் நிகழ்வு – முத்தமிழ் மன்றத்தின் பெரும் காப்பாளர் சி.இராஜேஸ்வரன் தலைமையில் நடைபெறும். இந்த நிகழ்வில் யாழ். பல்கலைக்கழக வாழ்நாள் பேராசிரியர் வைத்தியகலாநிதி சிவஞானசுந்தரம் பிரதம விருந்தினராகவும் கலை பண்பாட்டுக்கழக பொறுப்பாளர் கவிஞர் புதுவை இரத்தினதுரை சிறப்பு விருந்தினராகவும் கலந்து கொள்வர்.

## பாடசாலை திறப்பு விழா!

பருத்தித்துறை புனிதநகரில் விடிவெள்ளி பாடசாலை இன்று மாலை 3 மணியளவில் பிரதம விருந்தினராக கலந்து கொள்ளும் பருத்தித்துறைப் பிரதேச செயலர் வசந்தகுமாரால் திறந்து வைக்கப்படவுள்ளது.

இந்நிகழ்வில், புலம்பெயர்ந்தோருக்கான சர்வதேச நிறுவனப் பணிப்பாளர் ரணசிங்க, வடமராட்சி வலய கல்விப் பணிப்பாளர் சத்தியசீலன் ஆகியோர் விசேட விருந்தினர்களாகவும் சிறப்பு விருந்தினர்களாக பிரதேச செயலர் பசுபதி, கிராம சேவகர் சிவசண்முகம், போரூட் இணைப்பாளர் தேவிகாராணி, சுனாமி செயலக பணிப்பாளர் பாலையா குடத்தனை பங்குத் தந்தைராஜன் றொகான் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (14)

# சுனாமியால் உயிரிழந்தோருக்கு நினைவஞ்சலிக் கூட்டம்!

சுனாமி அனர்த்தத்தினால் உயிரிழந்த உடுத்துறை மகாவித்தியாலய ஆசிரியர்கள், மாணவர்களின் நினைவஞ்சலிக் கூட்டமும் உருவப்படத்திரை நீக்கமும் இன்று வியாழன் காலை 9 மணிக்கு வடமராட்சி கிழக்கு உடுத்துறை மகாவித்தியாலய மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

ஆரம்பத்தில் தேசியக் கொடி ஏற்றுதல், பாடசாலைக் கொடியேற்றுதல், பொதுச்சுடரேற்றுதல், உருவப்படத் திரைநீக்கம், ஈகச்சுடரேற்றுதல், அகவணக்கம், மலர்அஞ்சலி அஞ்சலி நிகழ்வுகள் இடம் பெறவுள்ளன.

இந்நிகழ்வில் பாடசாலை ஆசிரியர்கள், மாணவர்கள் தமிழீழ கல்விக் கழகத்தைச் சேர்ந்த பிரதிநிதிகள் என பலர் கலந்து கொள்ளவுள்ளனர். (14)

## பின்வரும் பணிநிலைக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன!

**1. மொழிபெயர்ப்பாளர் பதவிநிலை:**

ஆங்கிலத்தில் சரளமாக பேச, எழுத, திட்டங்கள் வரைய கற்றுக்கொண்டவராக இருத்தல்.

அரசசார்பற்ற நிறுவனங்களில் சேவையாற்றியமை விரும்பத்தக்கது.

கல்வித்தகைமை: பல்கலைக்கழக பட்டப்படிப்பு அல்லது இந்தத் துறையில் அனுபவம் வாய்ந்தவராக இருத்தல் வேண்டும்.

வயதெல்லை: 35 – 50 வயதுக்குட்பட்டவராக இருத்தல் வேண்டும்.

ஆண், பெண் இருபாலரும் விண்ணப்பிக்கலாம்.

யாழ்ப்பாண மாவட்டத்தில் சேவையாற்ற விரும்புபவர்கள் மட்டும்.

**2. ஆசிரியர்களுக்கான பதவிநிலை:**

வேலையற்ற தொண்டர் ஆசிரியர்களிடமிருந்து விண்ணப்பம் கோரப்படுகின்றது. கிளி, முல்.,யாழ்., வவு., மன்.

சமூகசேவையில் ஆர்வம் கொண்டவராக இருத்தல் வேண்டும்.

A/L சித்தி விரும்பத்தக்கது (ஆண், பெண்)

வயதெல்லை: (25 – 35)

விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளும் இடம்:

REERDO
மாவட்ட செயலகம்,
குளப்பிட்டிவீதி, ஆனைக்கோட்டை, யாழ்ப்பாணம்.
REERDO தலைமைப் பணியகம் கனகபுரம் கிளிநொச்சி

விண்ணப்ப முடிவு திகதி: 12/05/2005

(சி–4026) நிர்வாகம் REERDO

## மனித உரிமைகள் சான்றிதழ் கற்கைநெறி

மேற்படி கற்கைநெறி ( 36 மணித்தியாலங்கள்) எமது நிறுவனத்தால் நடத்தப்படவுள்ளது. இது வதிவிடக் கற்கை நெறியாக அமையும்.

**காலம் :** 11.05.2005 தொடக்கம் 15.05.2005 வரை

**கல்வித்தகைமை:** குறைந்தபட்சம் க.பொ.த. உயர்தரப்பரீட்சையில் பல்கலைக்கழகத்திற்குரிய அடிப்படைத் தகுதி பெற்றிருக்கவேண்டும். அத்துடன் ஒன்றில் மனிதஉரிமைக் கல்வி பயன்படுத்தப்படும் ஒரு பணியில் தற்போது அமர்ந்திருக்க வேண்டும். அல்லது ஏதாவது பணியில் தொடர்ச்சியாக இரண்டு வருட அனுபவம். பட்டதாரியாக இருப்பின் பணி அனுபவம் தேவையில்லை.

**புலமைப்பரிசில், விண்ணபப்படிவம்:**

கட்டணம் தொடர்பாக, எமது நிர்வாகத்தின் தீர்மானத்திற்கேற்ப சில புலமைப்பரிசில்கள் வழங்கப்படும். விண்ணபப்படிவங்களை எமது பணியகத்தில் வார நாட்களில் காலை 8.45 தொடக்கம் பிற்பகல் 4.30 மணிவரை பெற்றுக்கொள்ளலாம். படிவங்களைப் பெறுவதற்கான கடைசித்தினம் 18.04.2005. பூர்த்திசெய்த விண்ணபப்படிவங்களை எமக்குச் சமர்ப்பிக்கவேண்டிய கடைசித்தினம் 25.04.2005.

தொடர்ந்து நடத்தப்படவுள்ள வேறு கற்கை நெறிகள்:
(காலம் பின்னர் அறிவிக்கப்படும்.)

- சான்றிதழ் கற்கைநெறி: முரண்பாட்டு நிலைமாற்றம்
- டிப்ளோமா (180 மணித்தியாலங்கள்): மனித உரிமைகள்
- டிப்ளோமா (180 மணித்தியாலங்கள்): முரண்பாட்டு நிலைமாற்றம்

ஒவ்வொரு கற்கைநெறிக்கும் புதிய விண்ணப்பதாரிகளுக்கே முன்னுரிமை வழங்கப்படும்.

அருட்தந்தை அ.இ.பேணாட் (இயக்குநர்)
சமாதான மனிதஉரிமைப் பண்பாட்டு பணியகம் (செப்பாக்)
843, ஆஸ்பத்திரி வீதி யாழ்ப்பாணம். (சி–4022)

நாதன்ஸ் யாழ்ப்பாணம் குளிரூட்டப்பட்டது
இந்தியாவிலும் இலங்கையிலும் ஒரே தின வெளியீடு
குளிரூட்டப்பட்டது
தாவடி மைந்தன்
ஜெய் ஆகாஷ், பிரணதி,
நாசர், தாமு, வையாபுரி நடித்த




கா.நே(பு.நே) 10.30, 2.30, 6.30, 9.30 (சி-3977)

ராஜா யாழ்ப்பாணம்
சத்தியராஜ், சிபிராஜ்,
பானுப்பிரியா, வடிவேலு
நடித்த
ஜோர்
(சி-3980) பு.நே: 10.30, 2.30, 6.30,
8 ஆம் திகதி முதல்
கையோடு கை

மனோகரா திரையரங்கு யாழ்ப்பாணம்
06.04.2005 முதல் தனுஷ், ஸ்ரீதேவி, கருணாஸ் நடித்த
தேவதையைக் கண்டேன்
கா.நே 6.30, 9.30 (பு.நே)
பார்த்தீபன், காவேரி, மாஸ்ரர் அஸ்வின் மற்றும் பலர் நடித்த கண்ணாடிப் பூக்கள் (சிறந்த குடும்ப காவியம்)
கா.நேரம்: 10.30, 2.30,6.30 மட்டும் (பு.நே) (சி-3978)

நிறைஞ்சனாஸ் சங்கானை
விஜய், ரவிகிருஸ்ணா, நதீஷா
நடித்த
சுக்கிரன்
(சி-3976)
கா.நேரம்: 11.00, 2.45, 6.00 (பு.நே)

நாகம்ஸ் சுன்னாகம்
பிரசாந், வடிவேலு, மும்தாஜ்
நடித்த
லண்டன்
இயக்கம் – சுந்தர். சி
கா.நே. 11.00, 3.00, 7.00, 10.00

நமது ஈழநாடு அனுசரணையில்
இலவச ஆங்கில நேரடி வகுப்பு
கலந்துகொள்ளும் மாணவர்களுக்கு கற்றலுக்கான நூல் இலவசம்
மேலதிக விபரங்களும், இலவச அனுமதிச் சீட்டும் -
நாளைய நமது ஈழநாட்டில்

காரைநகர் – திருமணற்காடு

## அருள்மிகு ஸ்ரீ கும்பநாயகி முத்து மாரியன்னையின் சித்திரத்தேர் விழா சிறப்பிதழ் (2005-04-07 வியாழக்கிழமை இன்று)




சித்திரத்தேர்லேறி தீர்வுதர வேண்டுமம்மா

ஈழத்தமிழர் உரிமை தரவே தேர்லேறி வருக தாயே!
இறையாசி எங்கும் பெருக்க தேர்லேறி வருக தாயே
நாளையிங்கு நல்ல தீர்வைச் சேர்க்க தேர்லேறி வருக தாயே
நாடிவரும் சமாதானம் நம்மைச் சேர தேர்லேறி வருக தாயே
ஏழை வாழ்வில் ஏற்றம் காட்ட தேர்லேறி வருக தாயே
ஏற்ற தீர்வைப் பெற்றுத்தரவே தேர்லேறி வருக தாயே
வேளை நல்ல நாளாய் மாற தேர்லேறி வருக தாயே
வெற்றி தந்து எம்மை ஆள தேர்லேறி வருக தாயே.

நாலு திசையில் பிரிந்தவரை சேர்ந்திடவே தேர்லேறி வருக
நல்ல பேச்சைத் தொடக்கி வைக்க தேர்லேறி வருக
நீளும் துயரை நிறுத்தி வைக்க தேர்லேறி வருக
நிரந்தர தீர்வைத் தந்து காக்க தேர்லேறி வருக
ஆளும் உரிமை தமிழர் பெறவே அம்மா தேர்லேறி வருக
அனுபவிக்கும் துன்பம் தீர்க்க தேர்லேறி வரு
சூழ இன்பம் பெருக்கி வைக்க தேர்லேறி வருக
சூலம் வாளை கையிலேந்தி தேர்லேறி வருக.

கவிமாமணி மதுரகவி
காரை எம்.பி. அருளானந்தன்



அருள்மிகு ஸ்ரீ கும்பநாயகி முத்துமாரி அன்னையின் இன்றைய (07.04.2005) புதிய சித்திரத்தேர் விழா சிறக்க வாழ்த்துவோர்:

மலர் புடவையகம்
இல. 18. பெரியகடை.
67-A, யாழ்ப்பாணம்.
T.P 2791

யாழ்.காலணியகம்
(பாட்டா ஏஜென்சி)
இல 11, ஆஸ்பத்திரி வீதி,
நவீன சந்தை,
யாழ்ப்பாணம். T.P:3152

றூபா பன்முக வர்த்தகம்
104, ஸ்ரான்லி வீதி
யாழ்ப்பாணம்.
T.P: 2479


லலிதா புடவை மாளிகை
5,6, நவீன சந்தை,
யாழ்ப்பாணம்.
B3 சந்தை வீதி –
வவுனியா. T.P: 5260

இளவரசி சேலைச் சோலை
(பட்டுப்புடவைகளின் சாம்ராஜ்யம்)
57, நவீன சந்தை
யாழ்ப்பாணம். T.P: 2503

(C4015)

# சமஷ்டிக்கு 80 வீதமானோர் ஆதரவு: உண்மைக்குப் புறம்பான தகவலாம்!

## சோமவன்ச அமரசிங்க கூறுகிறார்



(கொழும்பு)

நாட்டில் 80 வீதமானோர் சமஷ்டி முறைக்கு விருப்பம் கொண்டிருப்பதாகக் கூறப்படுவது - உண்மைக்குப் புறம்பான தகவல் என்று ஜே.வி.பி தலைவர் சோமவன்ச அமரசிங்க தெரிவித்தார்.

அநுராதபுரம் பொது உள்ளக விளையாட்டரங்கில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற ஜே.வி.பியின் 34 ஆது ஏப்ரல் வீரர்கள் நினைவு நாளில் உரையாற்றியபோதே அவர் இவ்வாறு கூறினார்.

ஜே.வி.பி தலைவர் சோமவன்ச அமரசிங்கவின் தலைமையில் நடைபெற்ற இந்த வைபவம் 1971 ஆம் ஆண்டு உயிரிழந்த மக்கள், ஜே.வி.பி உறுப்பினர்கள் நினைவாக நடைபெற்றது. அங்கு அவர் தொடர்ந்து உரையாற்றும்போது -

சமஷ்டி முறையை ஏற்படுத்துவதற்கு மக்கள் கருத்தறியும் வாக்கெடுப்பு ஒன்றை நடத்தினால் அதனை தோல்வியடையச் செய்வோம். இதற்காக மக்களைத் தயார்படுத்தும் நடவடிக்கைகளை இப்போது முதல் ஆரம்பித்துள்ளோம்.

தற்போது பலராலும் கூறப்படும் சமஷ்டி முறைக்கு 80 வீதமான ஆதரவு இருக்குமானால் அதனை 20 வீதமாகக் குறைக்க தமது கட்சிக்கு முடியுமென்றும் அதற்காக மக்கள் கருத்தறியும் வாக்கெடுப்பு ஒன்று நடத்தப்படும் பட்சத்தில், அதனைத் தோல்வியடையச் செய்வதற்கு ஜனநாயக ரீதியான அமைதி செயற்பாடுகளை முன்னெடுக்கப்போவதாகவும் அவர் தெரிவித்தார்.

# ஜனாதிபதித் தேர்தலில் ஹெல உறுமயவும் போட்டி

(கொழும்பு)

எதிர்வரும் ஜனாதிபதி தேர்தலில்- ஜாதிக ஹெல உறுமயவும் வேட்பாளரை நிறுத்தவுள்ளதாக அந்தக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் குழுவின் தலைவர் அத்துரலிய ரத்ன தேரர் தெரிவித்தார்.

கடந்த 2 ஆம் திகதி வின்சன்ற் விளையாட்டு மைதானத்தில் நடைபெற்ற பொதுக்கூட்டமொன்றில் உரையாற்றும் போதே அவர் இதைத் தெரிவித்தார்.

ஜனாதிபதி தேர்தலில் போட்டியிடுவதற்கு எமது கட்சி தீர்மானித்தாலும், இதுவரை அதற்கான வேட்பாளரின் பெயர் சிபார்சு செய்யப்படவில்லை.

அவர் அங்கு தொடர்ந்து பேசுகையில் -

ஜனாதிபதி தேர்தலின் பின்பு இடம்பெறவுள்ள மாகாணசபை, மாநகர சபை, நகரசபை, பிரதேசசபைத் தேர்தல்களிலும் போட்டியிடுவதற்கு ஜாதிக ஹெல உறுமய தீர்மானித்துள்ளது.

இந்தத் தேர்தல்களில் தேரர்கள் மற்றும் தேரர்களின் குடும்பத்தவர்கள் ஆகிய இரு தரப்பினரையும் வேட்பாளர்களாக நிறுத்துவதற்கு ஹெல உறுமயவின் உயர் பீடம் உடன்பட்டுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். (தே)

# 3,500 ஆசிரியர்களை இடம்மாற்ற நடவடிக்கை

(கொழும்பு)

நாட்டிலுள்ள தேசிய பாடசாலைகளில் நீண்டகாலமாகக் கடமையாற்றும் 3,500 ஆசிரியர்கள் உடனடியாக இடம்மாற்றம் செய்யப்படவுள்ளதாக கல்வி அமைச்சு அறிவித்துள்ளது.

தேசிய பாடசாலைகளில் ஆசிரியர்கள் அதிகமாக இருக்கிற அதேவேளை , நாட்டின் பல பாடசாலைகளில் ஆசிரியர் பற்றாக்குறை காணப்படுவதால் - அந்த இடங்களை நிரப்புவதற்குத் தேசிய பாடசாலைகளில் நீண்டகாலமாகக் கடமையாற்றும் ஆசிரியர்கள் உடனடியாக இடமாற்றம் செய்யப்படுவார்கள் எனவும் கல்வி அமைச்சு அறிவித்துள்ளது. (01)

# சட்ட மீளமைப்பு பிரேரணைகள் நாடாளுமன்றில் சமர்ப்பிக்கப்படும்

(கொழும்பு)

எதிர்வரும் மே மாதத்தின் முதல் வாரத்தில் முக்கிய சில சட்ட மீளமைப்புகள் நாடாளுமன்றில் சமர்ப்பிக்கப்படவுள்ளன. இது தொடர்பான தீர்மானமொன்று நேற்று முன்தினம் நடைபெற்ற கட்சித் தலைவர்களின் கூட்டத்தில் எடுக்கப்பட்டது.

குற்றங்கள் சம்பந்தமான சட்ட மீளமைப்பு பிரேரணையும், குற்றங்கள் சம்பந்தமான விசேட சரத்துக்களை உள்ளடக்கிய பிரேரணையும் மே மாதம் 3 ஆம் திகதி சமர்ப்பிக்கப்படவுள்ளன.

குற்றங்கள் தொடர்பில் கைது செய்யப்பட்ட ஒருவரை 24 மணி நேரம் தடுத்துவைப்பது உட்பட்ட பல விடயங்கள் இந்த விசேட பிரேரணையில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

இதேவேளை, எதிர்வரும் மே மாதம் 4 ஆம் திகதி வெடிபொருட்கள் சம்பந்தமான மீளமைப்பு பிரேரணையும் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படவுள்ளது.

# மின்சாரசபை மீளமைப்பு கூட்டத்தில் முடிவுகள் எதுவும் எடுக்கப்படவில்லை

(கொழும்பு)

இலங்கை மின்சார சபை மற்றும் பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தை மீளமைப்புச் செய்வதற்கான கூட்டம் அமைச்சர் சுசில் பிரேம் ஜயந்த தலைமையில் இடம்பெற்றபோதும், எந்தவொரு முடிவும் எடுக்கப்படவில்லையெனத் தெரியவருகிறது.

இந்தக் கூட்டத்தில் திறைசேரி செயலாளர் பி.பி.ஜெயசுந்தர, ஜே.வி.பியின் நாடாளுமன்ற உறுப்பினர் நந்தன குணதிலக, காணி மற்றும் நீர்ப்பாசன அமைச்சர் அனுரகுமார திஸநாயக்க, சிறிய மற்றும் கிராமிய கைத்தொழில் அமைச்சர் கே.டி.லால் கந்த ஆகியோர் பங்குபற்றியிருந்தனர்.

இதில் மின்சாரசபை மற்றும் பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தைத் தனியார்மயப்படுத்துவதில்லையென இரண்டு பகுதியினரும் இணக்கம் தெரிவித்தனர்.

எனினும் இது தொடர்பாக இறுதி முடிவெதுவும் எடுக்கப்படவில்லை. இது தொடர்பாக தொடர்ச்சியான கலந்துரையாடல்களை நடத்துவதற்கு இந்தக் கூட்டத்தில் கலந்துகொண்டோர் இணக்கம் தெரிவித்தனர்.

இந்த விடயங்கள் தொடர்பாக இன்றும், நாளையும் தொழிற்சங்கங்களுடன் கலந்துரையாடல்களை நடத்தவுள்ளதாக அமைச்சர் சுசில் பிரேம் ஜயந்த தெரிவித்தார். இந்தச் சந்திப்பு ஜனாதிபதி மாளிகையில் இடம்பெற்றது.

இதேவேளை, ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியிலுள்ள கட்சிகளின் தலைவர்களுக்கான கூட்டம் நேற்று முன்தினம் நாடாளுமன்றக் கட்டடத்திலுள்ள பிரதமரின் அலுவலகத்தில், பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவின் தலைமையில் இடம்பெற்றது.

இதில் அமைச்சர்களான மைத்திரிபால சிறிசேன, தினேஷ் குணவர்த்தன, டி.யூ.குணசேகர, பேரியல் அஷ்ரப், சுசில் பிரேம் ஜயந்த, ஜெயராஜ் பெர்னாண்டோ புள்ளே மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர்களான விமல் வீரவன்ச, நந்தன குணதிலக ஆகியோர் கலந்துகொண்டனர்.

இந்தக் கூட்டத்தில் மின்சாரசபை மற்றும் பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தை மறுசீரமைப்பது தொடர்பாக ஆராயப்பட்டது.

## பால்மாவின் விலையை அதிகரிக்க கோரிக்கை

(கொழும்பு)

எரிவாயு மற்றும் குழந்தைகளுக்கான பால்மாவின் விலையை அதிகரிப்பதற்கு நுகர்வோர் சேவைகள் அதிகாரசபையிடம் மூன்று பிரதான நிறுவனங்கள் கோரிக்கை விடுத்துள்ளன.

பால்மாவின் விலையை 10 ரூபாவாலும், எரிவாயுவின் விலையை 50 ரூபாவாலும் அதிகரிப்பதற்கு இந்த நிறுவனங்கள் அனுமதி கோரியுள்ளன. எதிர்வரும் 18 ஆம் திகதி கூடும் நுகர்வோர் சேவைகள் அதிகாரசபை இந்தக் கோரிக்கை தொடர்பாக ஆராயவுள்ளது. (01)

# எரிபொருளின் விலை அதிகரித்தால் தனியார் பஸ் கட்டணமும் உயரும்!

(கொழும்பு)

தனியார் பஸ்களுக்கு சலுகை அடிப்படையில் அரசாங்கம் எரிபொருட்களை வழங்காது. எரிபொருளின் விலையை அதிகரித்தால் பஸ் கட்டணமும் அதிகரிக்க நேரிடும் என - தனியார் பஸ் உரிமையாளர் சங்கத்தின் தலைவர் கெமுனு விஜயரத்தின தெரிவித்தார்.

பஸ் கட்டணம் தொடர்பான தேசிய கொள்கையின் அடிப்படையில் 4 ரூபா 50 சதத்தால் எரிபொருளின் விலை அதிகரித்தால், பஸ் கட்டணத்தில் திருத்தங்கள் செய்யவேண்டிய நிலை ஏற்படும்.

டீசலின் விலையை அதிகரிக்காது அதற்கு தனியாருக்கு சலுகை அடிப்படையில் டீசலை வழங்கினால், ஜூலை மாதம் முதலாம் திகதி வரவுள்ள வருடாந்த பஸ் கட்டண திருத்தத்தை தாமதமாக்குவது குறித்து பரிசீலிக்கமுடியுமெனத் தெரிவித்தார். (தே)

# அரசாங்கத்துக்குள் ஏற்பட்டுள்ள முரண்பாட்டால் சமாதான முயற்சிகள் இழுத்தடிக்கப்படுகிறது!

## செல்வம் அடைக்கலநாதன் எம்.பி குற்றச்சாட்டு



(கொழும்பு)

அரசாங்கத்துக்குள் காணப்படும் முரண்பாடானது சர்வஜன வாக்கெடுப்பு விடயத்திலும் வெளிப்பட்டுள்ளது. சர்வஜன வாக்கெடுப்பு நடத்தப்படும் என்று அமைச்சர் அனுரா பண்டாரநாயக்க கூறுகிறார்.

ஆனால், சர்வஜன வாக்கெடுப்பு நடத்தப்படமாட்டாது என்று அமைச்சர் மங்கள சமரவீர கூறுகிறார். இவ்வாறு முரண்பட்டுள்ள அரசாங்கம் எவ்வாறு சமாதான முயற்சிகளை முன்னெடுக்கும் என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு எம்.பி செல்வம் அடைக்கலநாதன் கேள்வியெழுப்பியுள்ளார்.

அரசாங்கத்துக்குள் காணப்படும் முரண்பாட்டாலேயே சமாதான முயற்சி ஆரம்பிக்கப்படாமல் உள்ளது. சர்வஜன வாக்கெடுப்பென்ற மாயையைக் காட்டி, சமாதான முயற்சியைப் பிற்போட அரசாங்கம் முனைகிறது.

தமிழ்ச் சமூகம் பேச்சுக்கும் தயார், போருக் கும் தயார் என்பதை அரசாங்கம் உணர்ந்துகொள்ள வேண்டும்.

நிறைவேற்று ஜனாதிபதி ஆட்சி முறையை நீக்குவதற்கு சர்வஜன வாக்கெடுப்பு நடத்தப்படுவது தொடர்பாக அரசாங்கத்துக்குள் பல்வேறு முரண்பாடுகள் காணப்படுகின்றன. சமாதான முயற்சி விடயத்திலும் இத்தகைய முரண்பாடு காணப்பட்டது.

எனவே, சாக்குப் போக்குகளைக் கூறி- சமாதான முயற்சியை இழுத்தடிக்காமல், சமாதானப் பேச்சுக்களை ஆரம்பிக்க ஜனாதிபதியும், அரசாங்கமும் முன்வரவேண்டும்.

சர்வஜன வாக்கெடுப்பின் மீது தமிழ் மக்கள் அக்கறை காட்டவில்லை. இது தேவையற்ற விடயமாகும். சமாதானப் பேச்சுவார்த்தையை ஆரம்பிப்பதானால் அரசாங்கம் ஆரம்பிக்க வேண்டும். இல்லையேல் சமாதான முயற்சியைத் தொடரமுடியாதென பகிரங்கமாக அறிவிக்கவேண்டும்.

ஜே.வி.பியை அரவணைத்துக் கொண்டு சமாதான முயற்சியை ஆரம்பிப்பதென்பது வெறும் பகல் கனவாகும். புலிகளும், தமிழ்ச் சமூகமும் பலவீனமாக இருக்கின்றது என அரசாங்கம் நினைத்துவிடக்கூடாது.

தமிழ்ச் சமூகம் எதையும் சந்திக்கத் தயாராகவே உள்ளது. இன்று ஜனாதிபதியும், அரசாங்கமும், தம்மை ஏமாற்றுவதைத் தமிழ் மக்கள் உணர்ந்துள்ளனர்.

இனியும் இவர்கள் தமிழ் மக்களை ஏமாற்ற முடியாது என அவர் மேலும் தெரிவித்தார்.

# சட்டவிரோத கருக்கலைப்பு நிலையம் முற்றுகை!

(கொழும்பு)

ஹற்றன் - கொட்டகலை பிரதேசத்தில் சட்டவிரோதமாக மேற்கொள்ளப்பட்டு வந்த கருக்கலைப்பு நிலையம் ஒன்று நேற்று முற்றுகையிடப்பட்டது. இதன்போது அங்கிருந்த 3 பெண்களும், ஒரு ஆணும் ஹற்றன் பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டனர். அத்துடன் 100 இற்கும் மேற்பட்ட சிசுக்களின் சடலங்களும் மீட்கப்பட்டதாகக் கூறப்படுகிறது.

இவர்கள் 5 வருடங்களுக்கு மேலாக இந்தச் சட்டவிரோத கருக்கலைப்பு நிலையத்தை நடத்திவந்ததாகப் பொலிஸ் விசாரணைகளிலிருந்து தெரியவந்தது.

# இன்னும் 12 வருடங்களுக்கு எமது ஆட்சியே தொடரும்!

## மேர்வின் சில்வா கூறுகிறார்

(கொழும்பு)

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி தலைமையிலான அரசாங்கத்தை மேலும் 12 வருடங்க ளுக்கு யாராலும் அசைக்கமுடியாது. ஜனாதிபதி சந்திரிகாவே தொடர்ந்து 6 வருடங்கள் இதற்குத் தலைமை தாங்குவார் என, ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் நாடாளுமன்ற உறுப்பினர் மேர்வின் சில்வா கூறினார்.

றிவித்திகலை சுமண மகா வித்தியாலயத்தில் நடைபெற்ற 243 ஆவது கல்விக் கண்காட்சியில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு தொடர்ந்து உரை நிகழ்த்துகையில் -

இன்று ஐ.தே.கவில் அதிகாரப் போட்டி தலைதூக்கியுள்ளது. ரணில் விக்கிரமசிங்கவின் தலைமைக்கு ஆபத்து ஏற்பட்டு விட்டது. இதனால் சில நாடாளுமன்ற உறுப்பினர்கள் எமது கட்சியில் இணைந்துகொள்ளக் காத்திருக்கின்றனர்.

ஐக்கிய தேசியக் கட்சி நாட்டைப் பாதுகாப்பதாகக் கூறி நாட்டையும், நாட்டு மக்களையும் அதலபாதாளத்துக்குத் தள்ள எத்தனிக்கிறது. 100 மீற்றர் எல்லை குறித்து மட்டுமே அந்தக் கட்சி பேசுகின்றது. வேறு எதையும் பேச அந்தக் கட்சிக்குத் தெரியவில்லை எனத் தெரிவித்தார்.

# நியூஸிலாந்து அணிக்கு எதிராக அத்தப்பத்து - ஜெயவர்த்தன சதம்




(நேப்பியர்)

நியூஸிலாந்து அணிக்கு எதிரான முதல் டெஸ்ட் போட்டியின் முதல் இனிங்ஸ் ஆட்டத்தில் அத்தபத்துவும், ஜெயவர்த்தனவும் சதம் அடித்ததன் மூலம் இலங்கை அணியின் ஸ்கோர் 3 விக்கெட் இழப்புக்கு 351 ஆக உயர்ந்தது.

நேற்று நடைபெற்ற மூன்றாம் நாள் ஆட்டத்தில் விக்கெட் இழப்பின்றி 48 ஓட்டங்களுடன் இருந்த இலங்கை அணி தொடர்ந்து ஆடியது.

அத்தப்பத்துவும் , ஜெயசூரியவும் அபாரமாக ஆடி ஓட்டங்களைக் குவித்துக்கொண்டிருந்தபோது - ஜெயசூரிய 48 ஓட்டங்களுடன் எதிர்பாராத விதமாக எல்.பி.டபிள்யூ. முறையில் ஆட்டமிழந்தார். இவர் 66 பந்துகளில் 9 பவுண்டரிகளுடன் 48 ஓட்டங்களை எடுத்திருந்தபோது மாட்டினின் பந்துவீச்சில் ஆட்டமிழந்தார்.

அடுத்து சங்கஹார களமிறங்கியபோதும் அவர் ஒரு பவுண்டரியுடன் 5 ஓட்டங்களை மட்டுமே எடுத்த நிலையில் ஆட்டமிழந்து செல்ல நேரிட்டது. அவரது விக்கெட்டையும் மாட்டினே கைப்பற்றினார்.

இதன்பின்னர் ஜெயவர்த்தன களம்புகுந்தார். அத்தப்பத்து - ஜெயவர்த்தன ஜோடி ஸ்கோர் 285 ஐ எட்டும்வரை நிலைத்து நின்று ஆடியது. இருவரும் சதம் அடித்த நிலையில் மூன்றாவது விக்கெட் டாக அத்தப்பத்து ஆட்டமிழந்தார்.

இவர் 244 பந்துகளில் 22 பவுண்டரிகளுடன் 127 ஓட்டங்களைப் பெற்றமை குறிப்பிடத்தக்கது. அஸ்ரிலின் பந்துவீச்சில் பிளெமிங்கிடம் பிடிகொடுத்து இவர் ஆட்டமிழந்த பின்னர் - சமரவீர களமிறங்கினார். நேற் றைய ஆட்டநேர முடிவில் இலங்கை அணி 3 விக்கெட் இழப்புக்கு 351 ஓட்டங்களை எடுத்திருந்தது.

ஜெயவர்த்தன 200 பந்துகளில் 16 பவுண்டரிகளுடன் 118 ஓட்டங்களைப் பெற்றிருந்த நிலையிலும் - டிலான் சமரவீர 59 பந்துகளில் 5 பவுண்டரிகளுடன் 34 ஓட்டங்களைப் பெற்ற நிலையிலும் ஆட்டமிழக்காமல் இருந்தனர். இரு அணிகளுமே நிலைத்து நின்று ஆடிவருவதால் இந்தப் போட்டி வெற்றி தோல்வியின்றியே முடிவடையும் என எதிர்பார்க்கப்படுகிறது.




## வலய மட்டத்துக்கு தெரிவு

வலிகாமம் கல்வி வலய உடற் பயிற்சிப் போட்டிகளில் பங்குகொண்ட சங்கானை சிவப்பிரகாச மகாவித்தியாலய மாணவர்கள் நான்கு பேர் போட்டிகளில் முதலாம் இடத்தைப் பெற்று மாவட்ட மட்டப் போட்டிகளில் பங்குகொள்ளத் தெரிவுசெய்யப்பட்டுள்ளார்கள்.

தடைதாண்டிப் பாய்தல் போட்டியில் 17 வயதின் கீழ்ப்பிரிவு (ஆண்கள் ) பா.கிருபாகரன் 1 ஆம் இடத்தையும், 21 வயதின் கீழ்ப்பிரிவு (ஆண்கள்) த.தயாளகுமார் 1 ஆம் இடத்தையும் -

4 X 100 அஞ்சல் ஓட்டம் 13 வயதின் கீழ்பிரிவு (பெண்கள்) த. மிதிலா 1 ஆம் இடத்தையும், 100 மீற்றர் ஓட்டம் 13 வயதின் கீழ்பிரிவு (பெண்கள்) த.மிதிலா 1 ஆம் இடத்தையும் பெற்றனர். (48)

## உதைபந்தாட்ட போட்டி

கோப்பாய் பிரதேச செயலகப் பிரிவில் பதிவு செய்யப்பட்ட விளையாட்டுக் கழகங்களுக்கிடையிலான உதைபந்தாட்டப் போட்டி புத்தூர் வீனஸ் விளையாட்டுக்கழக மைதானத்தில் நடைபெற்றுவருகின்றது.

இன்றுமாலை 4 மணிக்கு நடைபெறவுள்ள ஆட்டத்தில் வளர்பிறை விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து, புத்தூர் எவரெஸ்ட் விளையாட்டுக் கழகமும் - மாலை 5 மணிக்கு நடைபெறவுள்ள மற்றைய ஆட்டத்தில் உரும்பிராய் திருக்குமரன் விளையாட்டுக்கழகத்தை எதிர்த்து, புத்தூர் வீனஸ் விளையாட்டுக்கழகமும் மோதவுள்ளன.

## வலயமட்ட கரப்பந்தாட்டத்தில் சண்டிலிப்பாய் இந்து சம்பியன்

(சண்டிலிப்பாய்)

வலிகாமம் வலய கரப்பந்தாட்டப் போட்டிகள் சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரி மைதானத்தில் கடந்த 30 ஆம் திகதி நடைபெற்றன.

இப்போட்டியில் 15 வயதுப் பிரிவில் சண்டிலிப்பாய் இந்துக் கல் லூரி அதனை எதிர்த்து ஆடிய ஆனைக்கோட்டை பாலசுப்பிரமணிய வித்தியாலயத்தை 2:0 செற்களாலும் - 17 வயதுப் பிரிவில் சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரி அதனை எதிர்த்து ஆடிய சங்கானை சிவப்பிரகாச மகா வித்தியாலயத்தை 2:0 செற்களாலும் வெற்றியீட்டி வலய மட்ட சம்பியனாகத் தெரிவு செய்யப்பட்டன.

இவ்வருட மாவட்ட மட்டப் போட்டிக்கு 15, 17 வயதுப் பிரிவுகளில் இவ்விரு அணிகளும் பங்குபற்றுவது குறிப்பிடத்தககது. (69)

## கரப்பந்தாட்ட போட்டி

சுனாமியால் உயிரிழந்தோரின் நினைவாக வடமராட்சி கரப்பந்தாட்டச் சங்க அனுசரணையுடன் தொண்டமானாறு ஒற்றுமை விளையாட்டுக் கழகம் நடத்தும் மின்னொளியிலான கரபந்தாட்டச் சுற்றுப் போட்டி - ஒற்றுமை விளையாட்டுக்கழக மைதானத்தில் இன்று நடைபெறவுள்ளது.

6 பேர் கொண்ட ஓவர் கேம் போட்டியில் நவஜீவன்ஸ் விளையாட்டுக் கழக ஏ அணியை எதிர்த்து, ஒற்றுமை விளையாட்டுக்கழக ஏ அணியும் - கலைமதி விளையாட்டுக்கழக ஏ அணியை எதிர்த்து, சிவகுமரன் விளையாட்டுக்கழக பீ அணியும் மோதவுள்ளன.

இதேவேளை , நடைபெறவுள்ள இறுதிப் போட்டியில் கலைமதி விளையாட்டுக்கழக ஏ அணியை எதிர்த்து, விவேகானந்தா ஏ அணியும் - ஆவரங்கால் இந்து இளைஞர் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து, அச்சுவேலி விக்னேஸ்வரா விளையாட்டுக் கழக அணியும் மோதவுள்ளன.

## மேஜர் மாறன் நினைவாக கரப்பந்தாட்டச் சுற்றுப்போட்டி

தமிழீழ விளையாட்டுத்துறை மேஜர் மாறன் நினைவாக கரப்பந்தாட்டச் சுற்றுப்போட்டியை இம்மாதம் 20 ஆம் திகதிமுதல் நடத்தவுள்ளது. மேற்படி போட்டி - இளைஞர், யுவதிகளின் விளையாட்டு வளர்ச்சியைக் கருதி மூன்று பிரிவுகளாக நடைபெறவுள்ளது.

பாடசாலை அணிகள் கலந்துகொள்ளும் போட்டி (செற்றப்)

கழக அணிகள் கலந்து கொள்ளும் போட்டி (செற்றப்)

40 அகவைக்கு மேற்பட்டவர்களுக்கான போட்டி (ஓவர் போட்டி)

ஆகிய பிரிவுகளில் நடைபெறவுள்ளது.

போட்டிகள் யாவும் மின்னொளியில் நடைபெறுவதுடன், வெற்றிக் கிண்ணங்களைக் கைப்பற்றும் அணிகளுக்கு 10 ஆயிரம், 5 ஆயிரம் ரூபா பணப்பரிசில்களுடன், பதக்கங்கள், பெறுமதிவாய்ந்த பரிசில்கள், சான்றிதழ்கள் என்பன வழங்கப்படும்.

போட்டிக்கான விண்ணப்பப் படிவங்கள் யாவும் எதிர்வரும் 15 ஆம் திகதிக்கு முன்னர் கிடைக்குமாறு அனுப்பிவைக்கவேண்டும். போட்டி விண்ணப்பப்படிவம் மாவட்ட விளையாட்டுத்துறைப் பொறுப்பாளர்களிடம் அல்லது விளையாட்டுத்துறை நடுவப் பணியகத்தில் பெற்றுக்கொள்ளலாமென அறிவிக்கப்பட்டுள்ளது.

## உதைபந்தாட்டப் போட்டி

(சுன்னாகம்)

எல்லைப்படை மாவீரர் ஞாபகார்த்தமாக சுனாமி தாக்கத்தினால் பாதிக்கப்பட்ட சிறார்களின் கல்வி வளர்ச்சிக்காக தமிழீழ விளையாட்டுத்துறை யாழ்.மாவட்ட பிரிவின் ஆதரவுடன் வலிகாம உதைபந்தாட்ட லீக் நடத்தும் உதைபந்தாட்டப் போட்டி சுன்னாகம் ஸ்கந்தவரோதயக் கல்லூரி மைதானத்தில் நடைபெற்றுவருகின்றது.

இன்றைய காலிறுதியாட்டத்தில் மாலை 4 மணிக்கு பருத்தித்துறை லீக்கைச் சேர்ந்த சென் சேவியர் விளையாட்டுக்கழகத்தை எதிர்த்து, வதிரி பொமெர்ஸ் விளையாட்டுக் கழகமும் - மாலை 5 மணிக்கு நடைபெறவுள்ள இன்னொரு ஆட்டத்தில் ஊரெழு றோயல் விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து, நாவாந்துறை சென் மேரிஸ் விளையாட்டுக்கழகமும் மோதவுள்ளன.

## தென்னாபிரிக்காவுடனான டெஸ்ட்; லாறாவும் விளையாடுகிறார்!



மேற்கிந்தியத் தீவுகள் அணியில் மீண்டும் இணைக்கப்பட்டுள்ள பிரைன் லாறா - தென்னாபிரிக்காவுடனான இரண்டாவது டெஸ்ட் போட்டியில் விளையாடவுள்ளார்.

மேற்கிந்தியத்தீவு அணியில் கடந்த மாதம் வீரர்கள் ஒப்பந்தப் பிரச்சினை ஏற்பட்டது. சர்வான் உட்பட பலரும் அணியில் இருந்து விலகினர். இதன் காரணமாக கப்டன் லாறா, முன்னணி வீரர்களான கெய்ல், சர்வான் உட்பட பலரும் அணியில் இருந்து விலகினர்.

இதனால் சந்தர்போல் தலைமையிலான அணி தற்போது மேற்கிந்தியத் தீவிற்கு சுற்றுப்பயணத்தை மேற்கொண்டுள்ள தென்னாபிரிக்க அணியுடன் டெஸ்ட் போட்டியில் விளையாடி வருகிறது. இந்த நிலையில் பிரச்சினை காரணமாக விலகிய வீரர்கள் அனைவரும் மேற்கிந்தியத்தீவு கிரிக்கெட் சபையுடன் சமரசம் செய்துள்ளனர்.

கப்டன் லாறா உட்பட அனைத்து வீரர்களும் மீண்டும் அணியில் இடம் பிடிக்க கிரிக்கெட் சபைக்கு விருப்பம் தெரிவித்துக் கடிதம் எழுதியுள்ளனர். இதன் காரணமாக தென்னாபிரிக்கா வுக்கு எதிரான 2 ஆவது டெஸ்ட் போட்டியில் லாரா சேர்க்கப்பட்டுள்ளார். எனினும் சந்தர்போலே கப்டனாகத் தொடருவார் என அறிவிக்கப்பட்டுள்ளது.

## அரியாலை மத்திய கழக அணியை கொக்குவில் கே.சி.சி.சி அணி 116 ஓட்டங்களால் வெற்றிகொண்டது

வி.பி.ஜெயரட்ணசிங்கம் வெற்றிக் கிண்ணத்துக்கான கிரிக்கெட் சுற்றுப் போட்டியின் - முதற்சுற்று ஆட்டத்தில் கே.சி.சி.சி அணி 116 ஓட்டங்களால் வெற்றிபெற்றது.

அரியாலை மத்திய விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து கே.சி.சி.சி கழக அணி கடந்த ஞாயிற்றுக் கிழமை ஸ்ரான்லிக் கல்லூரி மைதானத்தில் மோதியது.

நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற கே.சி.சி.சி அணி 45 ஓவர்களில் 289 ஓட்டங்களுக்கு 9 விக்கெட்டுக்களை இழந்தது. சிவசங்கர் 21, பிரகாஸ் 110, சசிகரன் 33 ஓட்டங்களைப் பெற்றனர். அரியாலை மத்திய கழக அணியைச் சார்ந்த றொகான் குமார் 33 ஓட்டங்களுக்கு 5 விக்கெட்டுக்களை வீழ்த்தினார்.

அடுத்துக் களமிறங்கிய அரியாலை மத்திய கழக அணி 173 ஓட்டங்களுக்கு சகல விக்கெட்டுக்களையும் இழந்தது. சுதர்சன் 34, டினேஸ்21, றொகான்குமார் 22 ஓட்டங்களைப் பெற்றனர். கே.சி.சி.சி கழக அணியை சேர்ந்த பிரகாஸ் 7 ஓட்டங்களுக்கு 4 விக்கெட்டுக்களை வீழ்த்தினார்.

வெற்றி பெற்ற கே.சி.சி.சி அணி 1.5.2005 இல் நடைபெற விருக்கும் 4 ஆவது காலிறுதிப் போட்டியில் மானிப்பாய் பரிஸ்கழக அணியை எதிர்த்து மோதவுள்ளது. எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை ஜொனியன்ஸ் கழக அணியை எதிர்த்து பற்றீசியன்ஸ் கழக அணி மோதவுள்ளது. இந்தப்போட்டி 1 ஆவது காலிறுதிப் போட்டியாக நடைபெறவுள்ளது.

### விளையாட்டு

## விக்ரோறியா கழகம் சம்பியன்

அண்மையில் வலி.மேற்கு பிரதேச சபைக்குட்பட்ட விளையாட்டுக்கழகங்களுக்கிடையில்லான எல்லே துடுப்பாட்டப்போட்டிகளில் விக்ரோறியா விளையாட்டுக்கழகம் சம்பியனானது.

துடுப்பாட்டப் போட்டியில் விக்ரோறியன்ஸ் விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து ஆடிய விக்ரோறியா விளையாட்டுக் கழகம் 7 ஓட்டங்களால் வெற்றியீட்டியது.

மற்றொரு அங்கமான எல்லே போட்டியில் வட்டுக்கோட்டை விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து விளையாடிய விக்ரோறியா விளையாட்டுக்கழகம் 2:1 என்ற ஓட்ட ரீதியில் வெற்றிபெற்றது. (207)

## இந்திய அணியில் அகர்கர் சேர்ப்பு!

பாகிஸ்தான் அணிக்கு எதிரான மூன்றாவது மற்றும் நான்காவது ஒரு நாள் போட்டிக்கான இந்திய அணியில் அகர்கர் சேர்க்கப்பட்டுள்ளார்.

தமிழக வீரர் பாலாஜிக்கு தோள் பட்டையில் காயம் ஏற்பட்டுள்ளதால் அவருக்கு மாற்று வீரராக அகர்கர் வாய்ப்புப் பெற்றிருக்கிறார். பாலாஜியும் தற்போது அணியில் உள்ளார்.

ஏனைய வீரர்கள் யாரும் மாற்றம் செய்யப்படவில்லை. கங்கூலி (கப்டன்) ஷேவாக், டெண்டுல்கர், ராவிட், யுவ்ராஜ் சிங், முகமட் கைஃப், தினேஸ் மொங்கியா, மகேந்திரசிங் டோனி, இர்பான் பதான், லக்ஸ்மிபதி பாலாஜி, சகீர்கான், அசிஷ் நெக்ரா, ஹர்பஜன் சிங், முரளி கார்த்திக், அஜித் அகர்கர் ஆகியோர் அணி வீரர்கள் ஆவர்.

# ஒப்பந்தகாரர்களின் அசமந்தத்தால் வீதித் திருத்த வேலைகள் தேக்கம்!

(யாழ்ப்பாணம்)

ஒப்பந்தகாரர்களின் அசமந்தப் போக்கால் கீரிமலை - நகுலேஸ்வரா வீதியின் ஒரு பகுதி திருத்தப்படாமல் போக்குவரத்துக்குப் பெரும் இடையூறாக இருப்பதாக பொதுமக்கள் விசனம் தெரிவித்துள்ளனர். இது தொடர்பாக மேலும் தெரியவருவதாவது -

அளவெட்டி பகுதியூடாக கீரிமலைக்குச் செல்லும் நகுலேஸ்வரா வீதி கடந்த சில வருடங்களுக்கு முன்னர் வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் நிதியுதவியுடன் புனரமைக்கப்பட்டது.

புனரமைப்பு வேலைகளுக்கான நிதி ஒதுக்கீடு முடிவடைந்துவிட்டது எனத் தெரிவித்து, இந்த வீதி அளவெட்டி - டச்சு வீதியுடன் இணையும் இடத்தில் ஒரு சிறு பகுதி புனரமைப்புச் செய்யப்படவில்லை.

ஆனால், முன்னர் இந்தப் பகுதி புனரமைப்பு செய்யப்படும் நோக்கில் ஆழமாக்கப்பட்டதுடன், அகலப்படுத்தப்பட்டது. இதனால் வீதியில் குழிகள் தோன்றின.

மழை காலங்களில் இந்தக் குழிகளில் வெள்ளம் முற்றாக நிரம்பி விடுவதால் - இந்த வீதியில் வாகனங்களில் பயணிப்பவர்களும், பாதசாரிகளும் இடையூறுகளை எதிர்நோக்கி வருகின்றனர். வீதியின் சிறுபகுதி பாதிப்படைந்துள்ளமையால் முழு வீதியையுமே பாவிக்க முடியாது இருப்பதாக பொதுமக்கள் கவலை தெரிவித்துள்ளனர்.

இந்த வீதியைத் தினமும் நூற்றுக் கணக்கான பாடசாலை மாணவர்கள், ஊழியர்கள், விவசாயிகள் உட்பட பலர் பயன்படுத்தி வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

அதேவேளை இவ்வாறான நிலைப்பாடுகள் குடாநாட்டின் ஏனைய சில பகுதிகளிலுள்ள வீதிகளிலும் காணப்படுகிறது. புன்னாலைக்கட்டுவன் - நிலாவரை இணைப்பு வீதியும் இவ்வாறு மோசமாகப் பாதிப்படைந்துள்ளது.

இந்த வீதிகளின் புனரமைப்புகள் தொடர்பாக வீதி அபிவிருத்தி அதிகார சபையினர் உரிய கவனம் எடுக்க வேண்டுமென அந்தப் பகுதி மக்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர். (94)

# பழுதடைந்த விவசாய உள்ளீடுகள் விற்கப்படுவதாக குற்றச்சாட்டு!

(யாழ்ப்பணம்)

விவசாய உள்ளீடுகளை விற்பனை செய்யும் சில வியாபார நிலையங்களில் பழுதடைந்த மற்றும் காலாவதியான களைகொல்லிகள், கிருமிநாசினிகள், உர வகைகள் என்பன விற்பனை செய்யப்படுவதாக விவசாயிகள் கவலை தெரிவித்தனர்.

அதிக விலை கொடுத்து இந்த உள்ளீடுகளைக் கொள்வனவு செய்யும் விவசாயிகள் அவை செயற்திறன் அற்று இருப்பதால் விளைச்சலில் பாதிப்பையும், நஷ்டத்தையும் எதிர்கொள்கின்றனர்.

இந்த விடயம் தொடர்பாக கமநல சேவைத் திணைக்களமும், விவசாயிகளின் நலனில் அக்கறையுள்ள அமைப்புகளும் நடவடிக்கை எடுக்கவேண்டுமென விவசாயிகள் தரப்பில் கோரப்பட்டுள்ளது.

பொதுவாக உள்ளூரில் இயங்கிவரும் விற்பனை நிலையங்களில் அதிக காலம் பொருட்கள் தேங்குவதனாலேயே இந்த நிலை ஏற்படுவதாகவும், இது தொடர்பாகத் திடீர் சோதனைகளை மேற்கொண்டு, இவ்வாறு பழுதடைந்த விவசாய உள்ளீடுகளைப் பறிமுதல் செய்யவேண்டுமெனவும் விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர். (94)

# நெடுந்தீவு வைத்தியசாலையின் பயன்பாட்டுக்கு ஓட்டோ அன்பளிப்பு

(நெடுந்தீவு )

நெடுந்தீவு மாவட்ட வைத்தியசாலைக்கு ஓட்டோ வழங்கும் நிகழ்வு நேற்று முன்தினம் நெடுந்தீவு வைத்தியசாலையில் இடம்பெற்றது.

இதனை பிரதி மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் ஏ.கேதீஸ்வரன், வைத்திய அதிகாரி ஆ.திருநாவுக்கரசுவிடம் கையளித்தார்.

இந்த நிகழ்வின்போது முன்னாள் பிரதி மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளரும், பிராந்திய வைத்திய அதிகாரியுமான கே.ரீ.சிவபாதம், தேசிய எழுச்சிப் பேரவை செயலாளர் சு. கணேசலிங்கம் ஆகியோர் கலந்து கொண்டனர்.

டுந்தீவு பிரதேசத்துக்கு வருகை தந்த பிரதி மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளரிடம் வைத்தியசாலையின் குறைபாடுகள், ஊழியர்களது பிரச்சினை, மருத்துவ உபகரண பற்றாக்குறை, சுகாதாரத் தொண்டர்களது நியமனம் மற்றும் தற்காலிகமாகப் பணியாற்றும் வைத்தியசாலை ஊழியர்களது நியமனம் என்பன தொடர்பாக வைத்தியசாலை சமூகத்தாலும், பொது அமைப்பு பிரதிநிதியாலும் தெரிவிக்கப்பட்டது.

இறுதியாக நெடுந்தீவின் நிலைமைகளை நேரடியாக அறிந்துகொண்டதற்கும், நோயாளர் சேவைக்கென ஓட்டோவை ஒப்படைத்தமைக்குமாக பிரதி மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளருக்கு - நெடுந்தீவு தேசிய எழுச்சிப்பேரவை செயலாளர் நன்றி தெரிவித்தார்.

நெடுந்தீவு பிரதேச மக்களது அவசர உள்ளூர் நோயாளர் சேவைக்கான இந்த ஓட்டோவை தமிழ் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்களது நிதி ஒதுக்கீட்டின் மூலம் பெற்று, அதை யாழ்.மாவட்ட அரசாங்க அதிபர், பிரதி மாகாண சுகாதார வேைகள் பணிமனைக்கு ஒதுக்கியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (113)

## நாவற்குழி - கேரதீவு வீதியூடான

# பஸ்சேவை சீரின்மையால் மக்கள் பெரும் விசனம்!

யாழ்ப்பாணத்திலிருந்து நாவற்குழி - கேரதீவு வீதி ஊடாக கோயிலாக்கண்டி வரை செல்லும் வடபிராந்திய போக்குவரத்துச் சபைக்குச் சொந்தமான 808 ஆம் இலக்க பஸ் சேவை சீரற்று இடம்பெறுவதால், பாடசாலைகளுக்குச் செல்லும் மாணவர்கள், அரச ஊத்தியோகத்தர்கள், வியாபாரிகள், பொதுமக்கள் பெரிதும் பாதிக்கப்படுகின்றனர்.

தற்பொழுது பாடசாலைகளில் 1 ஆம் தவணைப் பரீட்சை நடைபெற்று வருவதால் - இந்தப் பகுதி மாணவர்கள் பஸ்ஸுக்கு காத்திருந்துவிட்டு, கைதடிக்குச் சென்று அங்கிருந்து தனியார் சிற்றூர்திகளில் பயணித்து, யாழ்ப்பாணத்திலிருந்து தமது பாடசாலைகளுக்கு நடந்து செல்வதால், தாமதமாகவே செல்லவேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.

செம்மணி பாலம் திருத்தவேலை காரணமாக கோப்பாயை சுற்றிவரும் பஸ்கள் தாமதமாகவே தமது பயணத்தை மேற்கொள்கின்றன. எனவே பாடசாலை மாணவர்கள், அரச உத்தியோகத்தர்களின் போக்குவரத்தைச் சீர்செய்வதற்கு உரிய அதிகாரிகள் உடன் நடவடிக்கை எடுக்கவேண்டுமென மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (108)

# வீதி கடவைக் கோடுகள் இன்றி பாடசாலை மாணவர்கள் அவதி

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் - பருத்தித்துறை வீதியில் அமைந்துள்ள பாடசாலைகளின் முன், வீதியைக் கடப்பதற்கான வீதிக் கடவைக்கோடுகள் முற்றாக அழிந்துள்ளதால் மாணவர்கள் வீதிகளைக் கடப்பதில் பெரும் சிரமங்களை எதிர்நோக்குகின்றனர்.

குறிப்பாக கோப்பாய் - நாவலர் வித்தியாலயம், கிறிஸ்தவக் கல்லூரி ஆகியவற்றில் கல்வி பயிலும் மாணவர்கள் தினமும் வீதியைக் கடப்பதற்கு அவதிப்படுவதை அவதானிக்க முடிகிறது.

தற்போது கோப்பாய் சந்தியூடாக பெருமளவான வாகனங்கள் பயணிப்பதுடன், அவை அதிகரித்த வேகத்திலும் செல்லும் நிலை காணப்படுகிறது.

இதனால் விபத்துக்கள் ஏற்படுவதற்கான வாய்ப்புகள் அதிகரித்துள்ளமையால் - உரிய அதிகாரிகள் கவனத்தில் எடுத்து சமிக்ஞைகள், கடவைக்கோடுகள் ஆகியவற்றைப் பாடசாலைகள் முன் அமைக்குமாறு பொதுமக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (90)

# கடற்தொழிலாளர் ஓய்வூதிய திட்டத்தின் கீழ் நெடுந்தீவிலும் ஒருவருக்கு ஓய்வூதியம்!

(நெடுந்தீவு)

கடற்தொழிலாளர்கள் ஒன்றியத் திட்டத்தின்கீழ் நெடுந்தீவில் முதன் முதலாக ஓய்வூதியம் பெறத் தெரிவு செய்யப்பட்டவருக்கான ஓய்வூதியப் பத்திரம் வழங்கும் நிகழ்வு - கடந்த திங்கட்கிழமை மாலை 5.30 மணிக்கு சென். அன்ரனீஸ் பாலர் பாடசாலை மண்டபத்தில் இடம்பெற்றது.

நெடுந்தீவு 11 ஆம் வட்டாரத்தைச் சேர்ந்த இறப்பியேல் சந்தியாம்பிள்ளை என்பவரே தனது உழைப்பில் ஒரு தொகை பணத்தை இந்தத் திட்டத்துக்கு செலுத்தி - தற்போது தனது அறுபதாவது வயதில் மாதாந்த ஓய்வூதியமாக ஆயிரம் ரூபாவைப் பெறத் தகுதி பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இவருக்கான ஓய்வூதிய அட்டையை யாழ்.மாவட்ட கடற்புலிகளின் பொறுப்பாளர் அருணன் வைபவரீதியாக வழங்கிவைத்தார்.

இந்த ஓய்வூதியத் திட்டத்தில் சேர்ந்து பலர் பயனடைய வேண்டும் எனவும், இயலாத காலத்தில் இதுவொரு உதவித்தொகையாக இருக்கும் எனவும், இதேவேளை இந்த ஓய்வூதிய அட்டை வழங்கல் நிகழ்வை வைபவரீதியாக மேற்கொண்டதன் மூலம் பலருக்கும் இந்தத் திட்டம் தொடர்பாகத் தெளிவேற்படுவதுடன், இந்தத் திட்டத்தில் சேர்வதற்கு வாய்ப்புக் கிட்டும் எனவும் இந்த நிகழ்வில் கலந்துகொண்ட நெடுந்தீவு பிரதேச மீன்பிடி பரிசோதகர் தெரிவித்தார்.

இதேவேளை, இந்த நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றிய யாழ்.மாவட்ட கடற்புலிகளின் பொறுப்பாளர் அருணன் - கடற்தொழில் சங்கங்களது மக்கள் தொடர்பான செயற்பாடுகள் மற்றும் அபிவிருத்தித் திட்டங்கள் தொடர்பாகவும், சுனாமி நிவாரண நடவடிக்கைகளின்போது கடற்தொழில் சங்கங்களது பங்களிப்புகள், அவற்றினது முக்கியத்துவம் என்பன தொடர்பாக தெரிவித்தார்.

இந்த நிகழ்வில் நெடுந்தீவு தேசிய எழுச்சிப் பேரவைச் செயலாளர், மக்கள் ஒன்றியத்தின் தலைவர் மற்றும் விடுதலைப் புலிகளின் கடற்புலிப் பிரதிநிதிகள் மற்றும் கடற்தொழில் சங்கங்களின் பிரதிநிதிகள் எனப் பலர் கலந்துகொண்டமை குறிப்பிடத்தக்கது. (113)

# திருத்தவேலை காரணமாக மின்விநியோகம் நிறுத்தம்!

நெடுந்தீவு பகுதிக்கான மின்சார விநியோகம் மின் இயந்திர திருத்த வேலை காரணமாக கடந்த முதலாம் திகதி முதல் தடைப்பட்டுள்ளது.

எரிபொருள் வழங்கல் பகுதியில் ஏற்பட்ட திருத்தவேலையே இதற்குக் காரணமாகும். திருத்த வேலைக்கான உதிரிப்பாகம் மின்சாரசபையால் யாழ்.நகருக்கு எடுத்துச்செல்லப் பட்டுள்ளது. அது இதுவரைக்கும் திருத்தி மீண்டும் எடுத்துவரப்படவில்லை.

இந்த மின்சாரத் தடையால் அரச அலுவலகங்களது தொலைபேசிகள், கணினிகள் போன்றவை செயலிழந்துள்ளதுடன், வர்த்தகர்கள் மற்றும் பலர் பெரும் சிரமங்களை எதிர் கொள்கின்றனர். முதலாம் தவணைப் பரீட்சைக் காலமாதலால் மாணவர்களும் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும். (113)

# மழையினால் கடைக் கட்டடம் இடிந்து வீழ்ந்தது

(சங்கானை)

கடந்த ஞாயிற்றுக்கிழமை இரவு பெய்த மழையின்போது சங்கானை பிரதான வீதியில் சந்தைக்குள் அமைந்திருந்த கடையொன்று இடிந்து விழுந்ததால் - ஒன்றரை லட்சம் ரூபா வரையில் சேதம் ஏற்பட்டது.

சங்கானை பிரதேச சபை உப அலுவலகத்துக்குச் சொந்தமான இந்தக் கடையில் படம் பிரேம் போடும் வியாபாரம் நடைபெற்றுவந்தது.

கடையின் ஒரு பக்கச் சுவர் முற்றாகச் சரிந்ததால் மேற்கூரையுடன் கடை முற்றாக இடிந்து வீழ்ந்துள்ளது.

இந்தக் கடையில் இருந்த பிரேம் போடும் கண்ணாடி, தளபாடங்கள், வர்ணப் படங்கள் மற்றும் உபகரணங்கள் யாவும் சேதமடைந்துள்ளன. (48)

# விரிவுரைகள் 18 ஆம் திகதி ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

யாழ்.பல்கலைக்கழக விஞ்ஞான பீட முதலாம், இரண்டாம், மூன்றாம் வருட மாணவர்களுக்கான புதிய கல்வியாண்டுக்கான விரிவுரைகள் எதிர் வரும் 18 ஆம் திகதி ஆரம்பமாகவுள்ளன.

இதே தினத்தில் இந்த வருடத்துக்குரிய புகுமுக மாணவர்களுக்கான கல்விச் செயற்பாடுகளும் ஆரம்பமாகவுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (94)


இனிய பிறந்தநாள் வாழ்த்துக்கள்

முதலாவது அகவையில்



பெயர் : ம.திவ்வியா
முகவரி : வண்ணார்பண்ணை.

மூன்றாவது அகவையில்



பெயர் : மோ.கபில்ராஜ்
முகவரி : நெடுந்தீவு

ஆறாவது அகவையில்



பெயர் : தே.சிவகௌரி
முகவரி : புலோலி.





யாழ்.பல்கலைக்கழக நூலக கேட்போர் கூடத்தில் நேற்று ஆரம்பமான யாழ்.பல்கலைக்கழக விஞ்ஞான சங்கத்தின் 13 ஆவது ஆண்டு விழாவில் வைத்திய கலாநிதி எச்.கருணாநாயக்க உரையாற்றுவதையும், விழாவில் கலந்துகொண்டோரில் ஒரு பகுதியினரையும் படத்தில் காணலாம்.




# சுனாமியும் அதன் பின்னரான விவசாயமும்



அண்மையில் ஏற்பட்ட சுனாமி அழிவுகள் உயிர்களையும், உடைமைகளையும் மட்டும் பாதிக்கவில்லை. மிஞ்சிய உயிர்களும் தொடர்ந்து பாதிக்குமளவுக்கு எமது இயற்கை வளங்களையும் அது பெரிதும் பாதித்துள்ளது. குறிப்பாகச் சொல்லப்போனால் எமது உயிர் நாடியாக விளங்கும் விவசாயம் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளது.

மண்வளம், நீர்வளம் பாதிக்கப்பட்டதன் காரணமாகப் பயிர்ச்செய்கையும் பெருமளவு பாதிக்கப்பட்டுள்ளது. இதனால் வருமானம் குறைவடையச் சந்தர்ப்பமுள்ளது.

இப்போது வெங்காயச் செய்கை அறுவடைக்காலம். வெங்காயத்தில் ஏற்பட்டுள்ள நோய்கள், முக்கியமாக குமிழ் அழுகல் காரணமாகப் பலரது செய்கை பாதிக்கப்பட்டிருக்கிறது. அதே போல் கத்தரி, மிளகாய் போன்ற பயிர்களுக்கும் தண்டுப்புழுத் தாக்கம், இலைச்சுருள் போன்ற நோய்களால் பாதிப்பு ஏற்பட்டுவருகிறது.

சுனாமி பேரலைத் தாக்கம் ஏற்பட்டுள்ள பிரதேசங்களில் மட்டுமன்றி, அதை அண்டியுள்ள பல பகுதிகளிலும் இத்தகைய தாக்கம் உணரப்பட்டுள்ளது. அண்மையில் ஏற்பட்ட காலநிலை மாறுபாடுகளும் இதற்குக் காரணமாகக் கூறப்படுகிறது.

எவை எப்படியிருப்பினும் நாம் முறையான பயிர்ச்செய்கையில் ஈடுபடாமல், விவசாய போதனாசிரியரின் ஆலோசனை பெறப்படாமல் செய்யப்படும் விவசாய முயற்சிகள் நிச்சயமாக கமக்காரரின் எதிரிகளான நோய்களுக்குப் பெரிதும் சாதகமாக அமைந்து விடுவதை மறுக்கமுடியாது.

வடமராட்சியில் அண்மையில் விவசாய ஒருங்கிணைப்புக்குழுக் கூட்டத்தில் இது பற்றிக் கலந்துரையாடப்பட்டது. புலோலி விவசாயப் போதனாசிரியர் வி.பாலசுப்பிரமணியம், விவசாயிகளைப் பாதிக்கும் பயிரழிவு நோய்களினின்றும், பாதுகாப்பைப் பெறவும், நிலமற்ற வீட்டுத்தோட்டங்களை உருவாக்கி எமது அன்றாட உணவுத் தேவைகளுக்கான மரக்கறி வகைகளைப் பெறவும் ஒழுங்கமைக்கப்பட்ட விவசாயச் செய்கை முறைகளை விரிவாக விளக்கியுள்ளார். அவற்றை ஒவ்வொன்றாகப் பார்ப்போம்.

## வெங்காயச் செய்கை

- காலத்தே பயிர் செய்தல்.
- நோயற்ற விதை வெங்காயத்தை நடுகைக்குப் பயன்படுத்தல்.
- பரப்பு ஒன்றுக்கு 1½ அந்தர் விதை வெங்காயத்தை நடுகைக்குப் பயன்படுத் தல்.
- விதைக் குமிழைக் கீழ்க்கூறப்படும் பங்கஸ் தொற்றுநோக்கி பாவித்தபின் நடுகைக்குப் பயன்படுத்தல்.
- பங்கஸ் நாசினி 2 கலன் கலவையில் 10 கிலோகிராம் விதைக் குமிழை, 15 நிமிடங்களுக்கு ஊறவைத்து நிழலில் உலர்த்தியபின்னர் அவற்றை நடுகைக்குப் பயன்படுத்தல்.

## பின்வரும் அளவுப் பிரமாணப்படி பங்கஸ் நாசினிகளைப் பயன்படுத்தல்

கப்டான் 25 கிராம், 2 கலன் நீர்.
டைக்கோபோ 25 மி.லீற்றர், 2 கலன் நீர்.
றொப்சின் 18 கிராம், 2 கலன் நீர்.
கோமாய் 25 கிராம், 2 கலன் நீர்.

- வயலில் நோய்கள் வரும்போது, மேற்கூறிய பங் கஸ் நாசினியை 3 கலன் நீரில் கலந்து விசிறவும்.
- வெங்காய நடுகைக்கு முதல் சணல் விதையை விதைத்து, பூக்குமுன் அந்தச் செடியை மண்ணுக்குள் தாழ்த்தல்.
- பரப்புக்கு 250 கிலோகிராம் எரு அல்லது 80 - 100 கூடை உக்கிய எரு பாவித்தல்.
- கீழ்க் கூறப்படும் சிபார்சு செய்த இரசாயன உரத்தைப் பரப்புக்கு அளவுப்படி பாவித்தல்.

| | யூறியா | சுப்பர் பொஸ்பேற் | மியூறியேற் ஒப் பொட்டாஸ் |
|---|---|---|---|
| அடிக்கட்டு - | 1.625 கி.கி | 2.5 கி.கி | 1.25 கி.கி |
| மூன்றாம் வாரம் - | 1.625 கி.கி | .......... | .......... |
| ஆறாம் வாரம் - | 1.625 கி.கி | .......... | 0.625 கி.கி |

- தாவரப் பீடை நாசினிகளாகிய உள்ளிக் கரைசல், வேப்பம் விதைக் கரைசல்களை கிழமை தோறும் விசிறல்.

(தொடரும்)

எஸ்.ஜே.என்

# சூழல் பாதுகாப்புக்கு விவசாயத்தில் சில நடவடிக்கைகள்

சூழல் தாக்கம் பற்றிய கலந்துரையாடல்கள் உலகளாவிய மட்டத்தில் தற்பொழுது தொடர்ச்சியாக இடம்பெறுகின்றன. ஆனால் இன்றுவரை எம் நாட்டைப் பொறுத்தமட்டில் இதைப்பற்றிய செயற்திட்டங்கள் வார்த்தையளவில் இருந்திருக்கின்றதேயன்றி, நடைமுறையில் குறிப்பிட்ட அளவேனும் இல்லை. நாம் விவசாய ரீதியில் உற்றுநோக்குவோமானால் இரசாயன வளமாக்கிகள் (Chemical Fertilizers) மற்றும் இரசாயன பீடைகொல்லிகள் (Chemical Pesticides) சூழலைப் பேரழிவுக்கு இட்டுச்செல்கின்றன. இவைகளின் ஆபத்து பற்றிய தொழில்நுட்ப ஆய்வுக் கட்டுரைகள் பல பிரசுரிக்கப்பட்டிருக்கின்றன. ஆனால் இரசாயன வளமாக்கிகளினதோ, இரசாயன நோய் பீடைக் கொல்லிகளினதோ பாவனையில் வீழ்ச்சிக்கான நாட்டம் தென்படுவதாகத் தெரியவில்லை. இந்தக் கட்டுரையில் எனது விவசாய விஞ்ஞான அறிவின் தொடர்பாக இரண்டு விடயங்கள் ஆராயப்பட்டுள்ளன.



1. சேதனப் பண்ணை விவசாயத்தின் (Organic Farming) பங்கு.
2. நோய் பீடைகளை எதிர்க்கும் தன்மையுடன் பயிர் இனங்களின் (Varieties resistant to diseaes and pests) பங்கு.

## சேதனப் பண்ணை விவசாயத்தின் பங்கு

சேதனப்பண்ணை விவசாயம், இரு வழிகளால் நோக்கப்பட்டுச் செயற்பட்டு வருகின்றன.

1) எதுவித இரசாயன வளமாக்கிகளையும் இரசாயன நோய், பீடைக் கொல்லிகளையும் பாவிக்காதிருப்பதுடன், சேதன உரம் (Organic Ferilizer) மற்றும் இயற்கையாகக் காணப்படுகின்ற கனியுப்புக்களையும் (Minerals) பொருட்களையும் உபயோகிக்கும் பண்ணை விவசாய முறை.

2) மிகக் குறைந்த இரசாயன வளமாக்கிகளையும், விவசாய இரசாயனப் பொருட்களையும் சேதன உரம் மற்றும் இயற்கையாகக் காணப்படும் பொருட்களுடன் ஒன்றுசேர்த்து உபயோகிக்கும் பண்ணை முறை.

சேதன விவசாயப் பண்ணை முறையில், இரசாயன முறையில் சேர்க்கப்பட்ட வளமாக்கிகளுக்குப் பதிலாக சேதனப் பொருட்களே உபயோகிக்கப்படுகின்றன. சில சந்தர்ப்பங்களில் மிகக் குறைந்தளவு இரசாயனப் பொருட்கள் - சேதனப் பொருட்களுடன் பாவனையில் உட்படுத்தப்படுகின்றன. என்னைப் பொறுத்தமட்டில் சேதனப் பொருட்களை இயற்கையின் ஒரு அங்கமாகவே கருதலாம். ஆகவே சேதனப் பொருட்களை விவசாயத்தில் உபயோகிக்கும்போது, சூழல் தாக்கம் குறிப்பிட்டளவு குறைக்கப்படுகிறது. இதற்கு மாறாக இரசாயனப் பொருட்கள் (Chemical Substances) விவசாயத்தில் உபயோகிக்கப்படும்போது, சூழலில் தாக்கம் ஏற்படுவதுமல்லாமல், விவசாயத்திலும் தாக்கத்தை உண்டுபண்ணுகிறது. உதாரணமாக - இரசாயன களைநாசினிகளைப் பாவிக்கும்பொழுது, இவற்றின் மீதி (Residue) மண்ணில் பின்தங்கி, பயிர்களின் விளைச்சலைக் குறைக்கின்றன. இரசாயன நோய், பீடைகொல்லிகளின் மீதி விவசாய விளைபொருட்களாகிய காய்கள், பழங்கள், இலைக் கறிவகைகளில் பின்தங்கி, மனித குலத்தின் தேக ஆரோக்கியத்தைப் பாதிப்பதற்கு வழி வகுக்கின்றன. பீடைகொல்லிகளைப் பாவிப்பதனால் சூழலில் சூழலுடன் சேர்ந்து வாழும் சினேக பூர்வமான பீடைகளும் அழிக்கப்படுகின்றன. தற்சமயப்போக்கு என்னவென்றால், தாவரங்களிலிருந்து பிரித்தெடுக்கப்பட்ட பதார்த்தங்களை (Plant Extracts) பீடைகொல்லிகளாகப் பாவிப்பதே. உதாரணம் - வேம்பிலிருந்து (இலை, வித்துகள்) பிரித்தெடுக்கப்பட்ட பதார்த்தங்கள் - பீடை கொல்லிகளாகப் பாவனையில் இருக்கின்றன. இவைகள் சூழலை மாசடையச் செய்யமாட்டா.

ஆனால் வளமாக்கிகளினதும், பீடை கொல்லிகளினதும் வடிவில் இருக்கும் இரசாயனப் பொருட்கள் இனிய சூழலில் தாக்கத்தை உண்டுபண்ணும் கருவிகளாக இருப்பதுடன், அவை உற்பத்தியாளருக்கும், நுகர்வோருக்கும் தீங்கு விளைவிக்கும் என்று ஆழமாகக் கருதப்படுகிறது. சேதனப் பண்ணை விவசாயத்தை மேற்கொள்ளும்போது சூழல் பாதுகாக்கப்படுவதுடன், மனித குலத்துக்குத் தீங்கு விளைவிக்காமல் இருப்பதற்கும் ஏதுவாகிறது. (தொடரும்...)

கலாநிதி வை.அருள்நந்தி
தருவது:- தகவல் தொடர்பு மையம், விவசாயபீடம், யாழ்.பல்கலைக்கழகம்.

## குடாநாட்டு சந்தை நிலவரம்

| பொருட்கள் | சுன்னாகம் | திருநெல்வேலி | யாழ்ப்பாணம் | மருதனார்மடம் | சங்கானை | நெல்லியடி | சாவகச்சேரி |
|---|---|---|---|---|---|---|---|
| பயிற்றங்காய் | 30/= | 40/= | 50/= | 40/= | 30/= | 30/= | 30/= |
| வெண்டிக்காய் | 10/= | 20/= | 30/= | 10/= | 15/= | 20/= | 20/= |
| உருளைக்கிழங்கு | 65/= | 70/= | 80/= | 80/= | 70/= | 80/= | 80/= |
| கத்தரிக்காய் | 20/= | 20/= | 30/= | 15/= | 20/= | 10/= | 10/= |
| பாகற்காய் | 40/= | 30/= | 40/= | 40/= | 40/= | 30/= | 40/= |
| கரட் | 30/= | 30/= | 40/= | 30/= | 30/= | 40/= | 40/= |
| பீற்றூட் | 20/= | 20/= | 20/= | 10/= | 15/= | 20/= | 40/= |
| முருங்கைக்காய் | 250/= | 200/= | 200/= | 250/= | 250/= | 150/= | 240/= |
| வெங்காயம் | 25/= | 30/= | 40/= | 30/= | 40/= | 40/= | 40/= |
| பச்சை மிளகாய் | 30/= | 30/= | 40/= | 40/= | 40/= | 40/= | 30/= |

## தொழில்மலர்

# கடந்தகால நிகழ்வுகள், எதிர்கால முன்னளவை சார்ந்தே திட்டங்கள் அமைய வேண்டும்

ஒரு நிறுவனம் தனது வணிகச் சூழலை உத்தேசமாகக் கணக்கிட்டே உற்பத்தி, விற்னை ஆகியவற்றைத் திட்டமிடுகிறது. ஆனால் இந்தத் திட்டமிடல் துல்லியமாக அமைய வேண்டுமாயின், கடந்தகால நிகழ்வுகள், எதிர்கால முன் னளவை ஆகியவற்றைச் சார்ந்து, திட் டங்கள் அமைய வேண்டும். இதற்கு எண்கணக்கும், புள்ளியியலும் பெரிதும்



உதவுகின்றன.

சில எதிர்பாராத நிகழ்வுகளை எதிர் பார்ப்பதற்குரிய வாய்ப்புகளைப் புள்ளியி யல் கணக்கிட்டுத் தருகிறது. இயந்திரங்கள் பழுதாகக்கூடிய வாய்ப்பு, தரக்கட்டுப்பாட்டில் பொருள்களின் தரம் குறைவதால் வீணா கும் பொருள்களின் அளவு, மக்கள் தொகை அளவு, வாடிக்கையாளர் முன்னுரிமைகள், விளம்பரச் செலவின் மூலம் விற்பனை அதிகமாவதற்குரிய வாய்புகள் போன்ற பல்வேறு எதிர்கால நிகழ்வுகளை முன்ன ளவீடு செய்யப் புள்ளியியல் உதவு கிறது.

ஒரு நிறுவனத்தின் விற்பனையாளர்கள், பொருட்களை விற்பனை செய்வது மட்டு மன்றி, வாடிக்கையாளர்களின் விருப்பு வெறுப்புகள், அவர்களின் வருவாய், செலவு, குடும்ப உறுப்பினர்களின் எண் ணிக்கை, அவர்களின் வயது, பயன்படுத் தும் நுகர்பொருட்கள் போன்ற பல்வேறு தரவுகளையும் சேகரித்துத் தரவல்லவர்கள். அவர்களின் மூலம் சந்தையில் போட்டிப் பொருட்களின் விற்பனை அளவை அல்லது விபரங்களை அறிந்து கொள்ளமுடியும். அந்தத் தரவு களை அட்டவணைப்படுத்தித் தொடர் பில்லாத இனங்களின் நிகழ்வு களைத் தொடர்புபடுத்தி, ஒரு கணிப்பீடு செய்வதற்குப் புள்ளியியலின் நிகழ்தகவுக் கோட்பாடு உதவுகிறது.

நிகழ்தகவுக் கோட்பாடு என்பது - உறுதியாகச் சொல்லமுடியாத, ஆனால் நிகழக்கூடிய வாய்ப்புடைய ஒரு தன் மையை விளக்கும் கோட்பாடு ஆகும். இத்தகைய நிகழ்வின் தன்மையை அடுத்தடுத்துவரும் நிகழ்வுகளைக் கொண்டு கணிப்பிடமுடியும்.

எல்லோருக்கும் புரியக்கூடிய எடுத்துக் காட்டாகக் கூறப்படுவது - பூவா, தலையா நிகழ்வுதான். ஒரு நாணயத்தைச் சுண்டி

**சில எதிர்பாராத நிகழ்வுகளை எதிர் பார்ப்பதற்குரிய வாய்ப்புகளைப் புள்ளியி யல் கணக்கிட்டுத் தருகிறது.**

விட்டால், பூ விழுமா? தலை விழுமா? என் பது உறுதியாகத் தெரியாது. ஆனால் இரண் டில் ஒன்று என்பது உறுதி. பெரும்பாலும் நாணயம் கீழே விழாமல், குத்திட்டு நிற்பது அரிது. அதையும் கூட ஒரு வாய்ப்பாகக் கருதுவதுண்டு.

இதேபோன்று தாயம் உருட்டும்போது, விழக்கூடிய எண்கள் ஒன்று முதல் 12 வரை எதுவும் விழலாம். இத்தகைய வாய்ப்பு களைக் கணக்கிட்டால், 12 வகை வாய்புகள் இருப்பதை அறியலாம். ஆனால் பூவா, தலையா விழுவதுபோல அவை சம வாய்ப்புகளல்ல. ஆறுபுள்ளிகள் விழுவதற்கு வாய்ப்பு 1/4; நான்கு புள்ளிகள் விழு வதற்குரிய வாய்ப்பு 1/6. இவ்வாறு இரண்டு காய்களில் தோன்றும் கூட்டுப்புள்ளிகளால், எண்ணிக்கை கணக்கிடப்படுவதால், வாய்ப்பு பல்வேறு நிலைகளில் அமைகிறது. நான்கு புள்ளிகள் இரண்டு விதமாகத் தோன்றலாம். (1+3;2+2) இரண்டு காய்களில் விழும் புள் ளிகள் ஒன்றை யொன்று சார்ந்தவை அல்ல.

இதேபோன்று சார்பற்ற நிகழ்வுகளைத் தொடர்ந்து பதிவு செய்து, அவற்றுக்கிடையே ஒரு தொடர்பை ஏற்படுத்துவது நிகழ்தகவுக் கோட்பாடு. ஒரு நாட்டின் ஆட்சி ஆட்டம் காணும் போது, அந்த நாட்டின் பங்குச் சந்தையில் பங்குகளின் விலையில் சரிவு ஏற்படுவதைக் காண்கிறோம். மக்களின் நம்பிக்கைக்கான காரணிகள் எத் தனையோ உள்ளன. நாட்டில் போர் அச் சுறுத்தல் நிகழும்போது, நீண்டகால நுகர் வுப் பொருட்களுக்குத் தேவை குறைந்து, உணவுப் பொருட்களின் தேவை அதி கரிக்கிறது. இது பற்றாக்குறையால் எழும் தேவை அன்று. எனவே சார்பற்ற காரணி களின் போக்கை உறவுபடுத்தி, எதிர்கால நிகழ்வுகளைக் கணிப்பது முன்னள வீடாகிறது. நாம் அசட்டை செய்யக் கூடிய காரணிகள் மிகவும் முதன்மையான இடத் தைப் பிடித்து, மாற்றங்களை ஏற்படுத்த வல்லவை. இந்தவகையில் நிகழ்தகவுக் கோட்பாடு, புள்ளியியலில் பெரும்பங்கு வகிப்பதோடு, வணிகக் கணிப்புகளுக்கும் பேருதவி புரிகிறது.

புள்ளியியலுக்கான தரவுகள் பல முன்பே பலரால் பல்வேறு நோக்கங்களுக் காகச் சேகரிக்கப்பட்டிருக்கலாம். சிலநேரங் களில் புதிய தரவுகளும் திரட்டப்பட வேண் டியிருக்கலாம். இந்தத் தரவுகளைத் திரட்டி, அவற்றைப் பகுப்பாய்வு செய்வதன் மூலம், பல காரணிகளின் போக்குகளும், அவற் றுக்கான காரணங்களையும் கண் டறிய முடியும். தரவுகளை அட்டவணைப் படுத் தல், வரைபடத்தில் குறித்தல் ஆகி யவை மூலம், காரணிகளின் போக்கும் ஏனைய காரணிகளுக்கிடையே உள்ள உறவும் வெளிப்படும். இவை வணிகக் கணிப்புக் களுக்குப் பெரிதும் உதவும்.

# ஒரு நிறுவனத்தின் சொத்து அதன் வாடிக்கையாளர்களே

**வாடிக்கையாளர்களைத் தக்க வைத்துக் கொள்ள வேண்டுமா? வாக்குறுதிகளை நிறைவேற்றுங்கள்.**

ஒரு பொருளை வெறுமனே காட்சிப் படுத்தலுக்கு மட்டும், நிறுவனங்கள் உற்பத்தி செய்வதில்லை. அந்தப் பொருள் உற்பத்தி செய்யப்படுவதன் நோக்கம், அது இறுதியாக வாடிக்கையாளரைச் சென்ற டையவேண்டுமென்பதாகும்.

எனவே, வியாபாரத்தில் முதல் மரி யாதை வாடிக்கையாளர்களுக்குத்தான் கொடுக்க வேண்டும். அவர்களைத் திருப்திப் படுத்துவதுடன், எதிர்பாராத செயல்களைச் செய்து, அவர்களை வியப்பில் ஆழ்த்தவும் வேண்டும்.

ஒரு வாடிக்கையாளரைத் திருப்திப்படுத்த வேண்டுமென்றால், ஒரு வியாபாரிக்கு அல் லது விற்பனையாளருக்குத் தேவைப்படு வது போதிய தகவல் அறிவும், பொறு மையும் ஆகும்.

ஒரு விற்பனையாளர் அல்லது வியா பாரி- பழைய வேலைகளைத் திறம்படச் செய்வதால் மட்டும் வாடிக்கையாளர்களைத் திருப்திப் படுத்திவிட முடியாது. வாடிக்கை யாளர்தான் அவர்களுடைய இலக்கு. வாடிக் கையாளர் தலையில் தம் பொருட்களைக் கட்டிவிட வேண்டும் என்ற நினைப்பு கூடாது. மாறாக வாடிக்கையா ளர்கள் வியாபாரத்தின் கூட்டாளிகள் என்ற நினைப்பு எல்லா வியா பாரிகளுக்கும் ஏற்பட வேண்டும்.

ஒரு வியாபாரத்தின் மதிப்புமிக்க சொத்துக்கள் - கட்டடங்கள் அல்ல. கம் யூட்டர்கள், ஆலோச கர்கள் அல்ல. ஏன் ஊழியர்கள்கூட அல்ல. பின்? எல்லா நிறுவனங்களுக்கும் சொத்து என்பது அவற் றின் வாடிக்கையா ளர்களே.

அவர்கள் இல்லா விட் டால் நிறுவனம் ஏது?

எனவே, வாடிக்கை யாளர்கள் சொல் வதைக்காது கொடுத்துக் கேட்டுக் கொள்ள வேண்டும். சொற்களில் பொருளைப் புரிந்து கொள்வது மட்டுமல்ல; பேசும் தொனி உணர்த்துவது என்ன என்பதையும் தெரிந்து கொள்ளவேண்டும். சொல் வேறு, பொருள் வேறு!



இதனடிப்படையிலேயே வாடிக்கையா ளர்களைக் கையாளவேண்டும். அவர் களைக் கையாள்வதற்கு நிதானம், பொறுமை, தகவல் அறிவு தேவை.

வாடிக்கையாளர் களிடம் நம்பிக் கை யையும், நல்லெண்ணத் தையும் ஏற்படுத்து வது கடினம். ஆனால், அதைக் குலைப்பது எளிது.

எனவே விற்பனையா ளர்கள் மிக வும் கவன மாக நடந்துகொள்ள வேண்டும்.

மூன்று விதங்களில் வாடிக்கையாளர் கள் ஒரு வியாபாரியை எடை போடு கிறார்கள். அவை பேச்சுத் திறமை, செயற்பாடு, விற்பனையாகும் பொருளின் கூடுதல் மதிப்பு. இவற்றைப் பொறுத்தே வியாபாரிகள் \ விற்பனையாளர்கள் வாடிக்கையாளர்களை நெடுங்காலம் தக்கவைத்துக் கொள்ள முடியும். பொதுவாக வாடிக்கையாளர்கள் விலையை மறந்து விடுவார்கள். தரத்தை வெகுகாலம் நினை வில் வைத்திருப்பார்கள்.

வாடிக்கையாளர்கள் கூறும் புகார்களில் பல தகவல்கள் உள்ளன. எனவே உங்கள் தயாரிப்புகளில் பழுது இருப்பதாகத் தெரிந் தால், தயங்காமல் வாடிக்கையாளர்களிட மிருந்து அவற்றைத் திரும்பப் பெறுங்கள்.

பழுதை நீக்க முடியும் என்றால் நீங் குங்கள்.

அல்லது புதியனவற்றைக் கொடுங்கள். அப்பொழுதுதான் நல்ல பெயர் கிடைக்கும்.

புதிய வாடிக்கையாளர்களைப் பிடிப் பதை விடவும் இருக்கிற வாடிக்கையாளர் களைத் தக்கவைத்துக்கொள்வது எளி தானது, சிக்கனமானது. எனினும் புதிய வாடிக்கையாளர்களையும் புறக்கணிக்கக் கூடாது.

# சிற்பக் கலையில் ஈடுபடுவோரை அரசு ஊக்குவிக்கவேண்டும்

## சிற்பாசாரியார் சு.சண்முகவடிவேல் தெரிவிப்பு

தமிழகத்தில் சிற்பக்கலைக் கல்லூரி நிறுவப்பட்டு, சிற்பக்கலைகள் அழியாது பாதுகாக்கப்பட்டு வருகின்றன. அதேபோன்று எமது நாட்டிலும் சிற்பக் கலைக் கல்லூரி நிறுவப்பட வேண்டும். அதன் மூலம்தான் சிற்பக்கலை எதிர்காலத்தில் பாதுகாக்கப் படும் என வவுனியா அபிராமி சிற்ப நிலையத்தின் பொறுப்பாளர் கலாபூஷணம் சு.சண்முகவடிவேல் ஸ்தபதி தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் -

இந்தக் கலையில் விரல்விட்டு எண்ணக்கூடிய சிற்பக் கலைஞர்களே நமது நாட்டில் உள்ளனர். சிலை செய்வதில் பல தொழில் நுட்பங்கள் உள்ளன. எங்களுடைய வருங்கால சந்ததியினர் இதனைப் பாதுகாக்க வேண்டுமானால், சிற்பத் தொழிலில் ஈடுபடுபவர்களை அரசு ஊக்குவிக்க வேண்டும்.

நாங்கள் பாரம்பரிய சிற்பக் கலைஞர்களாகவே உள்ளோம். சிற்பக் கலைஞன் என்பவன் ஒழுக்க சீலனாக இருக்கவேண்டும். அதன்படி ஒழுக வேண்டும். அப்படி இருந்தால்தான் அவன் செதுக்கும் சிற்பத்தில் கலைத் தன்மைகள் பிரதிபலிக்கும். சிற்பக் கலை ஏனைய கலைகளைப் போன்றதல்ல. பொதுமக்கள் வழிபடுகின்ற படிமம்தான் அது. எனவேதான் சிற்பக் கலைஞன் முழு மனதுடன் இந்தத் தொழிலில் பக்தி சிரத்தையுடன் ஈடுபடவேண்டும். அப்போதுதான் அதன் முழுமையான பயனை அடையமுடியும்.

கருங்கல்லில் சிலைகளை வடிவமைக்கும் சிற்பத் தொழில் நிலையம் வவுனியாவில் எல்லப்பர் மருதன் குளம், வவுனியா நகரின் முதலாம் குறுக்குத்தெரு ஆகிய இரு இடங்களிலும் இயங்கி வருகின்றன.

மிகவும் பழமைவாய்ந்த இந்தச் சிற்பத் தொழில் அருகி வருகின்றது. எனவே சிற்பக் கலைஞர்களை ஊக்குவிப்பதன் மூலம்தான் இதனைப் பாதுகாத்துக்கொள்ள முடியும். வவுனியாவில் கருங்கற்பாறைகள் இருப்பதனால் தரமான கல்லுகள் பெறக்கூடியதாக உள்ளன. வடக்கு, கிழக்கு, தென் பகுதியின் பல ஆலயங்களுக்கு இங்கிருந்துதான் விக்கிரகங்கள் எடுத்துச் செல்லப்படுகின்றன. இதனைவிட ஐரோப்பிய நாடுகளுக்கும் விக்கிரகங்கள் அனுப்பிவைக்கப்படுகின்றன.

சிற்பக் கலைகள் யாவும் ஒரு இலக்கணத்துடன் தோன்றியதாகும். தமிழுக்கு அகத்தியர்போல் சிற்பத்துக்கு மயன் முதல்வன்.

அவன் வகுத்த கொள்கையின் அடிப்படையில் சிற்பக்கலைகள் செதுக்கப்படுகின்றன. சிற்பங்கள் செதுக்குவதற்கும் இலக்கணங்கள் உள்ளன. மயன் வகுத்த கொள்கையின் அடிப்படையில் சிற்பங்கள் வளர்ந்து வருகின்றன என அவர் மேலும் தெரிவித்தார்.

## வன்னிப் பதிவுகள்

# வவுனியா நொச்சி மோட்டை கிராமத்தில் சிறுபோகம் செய்வதற்கு படையினர் அனுமதி

வவுனியா வடக்கு நொச்சி மோட்டை கிராமத்தில் 8 ஆண்டுகளின் பின்னர் சிறுபோக நெற்செய்கையை மேற்கொள்ளவதற்கு படையினர் அனுமதித்துள்ளனர்.

சுமார் 150 ஏக்கர் நெற்பயிர் செய்கையை மேற்கொள்ளக்கூடிய பிரதேசத்தில் 50 ஏக்கர் நிலத்தில் நெற்செய்கையை மேற்கொள்வதற்கே அனுமதியளிக்கப்பட்டுள்ளது.

இந்தக் கிராம மக்கள் ஜயசிக்குறு படைநடவடிக்கையின் போது இடம் பெயர்ந்து, தற்போது நலன்புரிநிலையங்களிலும், வேறு இடங்களிலும் வாழ்ந்து வருகின்றனர். இவர்கள் தம்மை மீளக்குடியமர அனுமதிக்குமாறு தொடர்ந்து வலியுறுத்திவந்தனர்.

இந்த நிலையில் இந்தப்பிரதேசம் உயர்பாதுகாப்பு வலயமென்பதாலும், படையினர் மீளக்குடியமர்வதற்கு அனுமதி மறுத்ததன் காரணத்தாலும் பயிர்ச் செய்கையை மேற்கொள்வதற்கு அனுமதிக்குமாறு மக்கள் கேட்டுக் கொண்டதற்கு இணங்கவே கடந்த 8 ஆண்டுகளின் பின்னர் இப்போது குறிப்பிட்ட 50 ஏக்கர் நிலப்பரப்பில் நெற்பயிர்ச் செய்கையை மேற்கொள்வதற்கு படையினர் அனுமதி அளித்துள்ளனர்.

## இன்றைய நாளில்... அன்று நிகழ்ந்தவை...

**ஏப்ரல் - 07**

1827 : கிடைக்கக் கூடியதாக உள்ள எழுத்துச் சான்றுகளின்படி முதல் தீப்பெட்டி ஸ்டர்த்டன் ஆண்டி என்ற இடத்தில் விற்பனை செய்யப்பட்டது.

1917 : ஜேர்மனி மீது கியூபா போர்ப்பிரகடனம் செய்தது.

1918 : ஜேர்மன் கடற்படைக்குச் சொந்தமான விமானம் ஒன்று அட்றியாடிக் பகுதி வானில் தீப்பற்றி எரிந்து வீழ்ந்தது.

1919 : முதலாம் உலக யுத்தம் தொடர்பில் நடந்த பேச்சுவார்த்தையில் முட்டுக்கட்டை ஏற்பட அமெரிக்கா பேச்சுவார்த்தையில் இருந்து விலகுவதாக அறிவித்தது.

1921 : இராணுவ அதிகாரிகளிடையே ஏற்பட்ட போட்டி காரணமாக சீனா வட சீனா, தென்சீனா என இரண்டாகப் பிரிந்தது.

1926 : செயின்ட் லூயிஸ் ஒபிஸ் போ என்ற இடத்தில் இடி விழுந்ததால் ஏற்பட்ட தீ விபத்தில் 900 ஏக்கர் நிலப்பரப்பு எரிந்து சாம்பலாகியது. ஐந்து நாள்கள் தொடர்ந்து எரிந்த தீயினால் பலகோடிடொலர்கள் பெறுமதியான சொத்துக்கள் தீக்கு இரையாகிய போதிலும் இரண்டே இரண்டு பேர்களே இறந்தனர்.

1933 : அரசுப் பணிச் சட்டம் என்ற ஒரு சட்டத்தை ஜேர்மனியில் ஹிட்லர் நிறைவேற்றியதன் மூலம் அரசுப் பணிகளில் இருந்து யூதர்களை நீக்கிவிட்டார்.

1934 : பின்லாந்தும், ரஷ்யாவும் பரஸ்பரம் ஆக்கிரமிப்புச் செய்து கொள்வதில்லை என்ற ஒரு ஒப்பந்தத்தை செய்து கொண்டன.

1939 : இத்தாலி அல்பேனியாவை கைப்பற்றிக் கொண்டது.

1940 : 500 போக்குவரத்து விமானங்கள், 100 சண்டை விமானங்கள், 300 குண்டு வீச்சு விமானங்களுடன் ஆறு படைப்பிரிவுகளது போர் வீரர்களைக் கொண்ட ஒரு பெரும் ஜேர்மனியக் கப்பல் படையணி - நோர்வே நாட்டின் மீது படையெடுப் பதற்காக தமது தளத்தைவிட்டு புறப்பட்டது.

1956 : ஸ்பெயின் நாட்டு ஆதிக்கத்தில் இருந்து மொராக்கோ சுதந்திரம் பெற்றது.

1971 : அமெரிக்கப் படைகளை வியட்நாமிலிருந்து திருப்பி அழைப்பதாக அமெரிக்க ஜனாதிபதி நிக்ஷன் அறிவித்தார்.

1979 : ஈரானிய மதத் தலைவர் அயதுல்லா கொமெய்னியின் அரசு முன்னாள் பிரதமர் மற்றும் முக்கிய அமைச்சர்களை தூக்கிலிட்டது.

1994 : ருவாண்டா மற்றும் புரூண்டி அதிபர்கள் படுகொலை செய்யப்பட்டனர்.

✦ : உலக நலவாழ்வு தினம்.

தொகுப்பு - சந்துரு

# முதியோர் இல்லம் அமைக்க நடவடிக்கை

(வவுனியா)

வவுனியா பிரதேசத்தில் முதியோர் இல்லம் ஒன்றை அமைப்பதற்கு ஒழுங்குகள் மேற்கொள்ளப் பட்டுள்ளதாக வவுனியா அரச அதிபர் சி.சண்முகம் தெரிவித்தார்.

முதியோர் இல்லம் அமைப்பது தொடர்பான முக்கிய கலந்துரையாடல் அண்மையில் வவுனியா அரச செயலக மகாநாட்டு மண்டபத்தில் இடம் பெற்றது.

இந்தக் கலந்துரையாடலின் போது நிழலகம் என்ற பெயரில் முதியோர் இல்லத்தை அமைப்பதென முடிவெடுக்கப்பட்டுள்ளது.

இந்தக் கலந்துரையாடலில் வவுனியாவில் உள்ள கல்விச்சமூகம், பொது அமைப்புக்களின் பிரதிநிதிகள் எனப் பலரும் கலந்துகொண்டனர். (03)

# பரமபுத்திரனின் "தூய மனதுடன்" நூல் அறிமுக விழா கிளிநொச்சியில்

(கிளிநொச்சி)

பரமபுத்திரனின் ''தூய மனதுடன்'' நூல் அறிமுக விழா நிகழ்வு நேற்றுமுன்தினம் கிளிநொச்சி அழகியல் கலாமன்றத்தில் இடம்பெற்றது.

இந்த நிகழ்வு கிளிநொச்சி வலய கல்விப் பணிப்பாளர் த.குருகுலராஜா தலைமையில் இடம்பெற்றது.

இந்த நிகழ்வில் ஆசியுரையை கிளிநொச்சி மாவட்ட கல்விக்கழகப் பொறுப்பாளர் ஜீவராஜ், அழகியல் கலாமன்ற அதிபர் விஜயசேகரம் ஆகியோர் நிகழ்த்தினர். வாழ்த்துரையை கிளிநொச்சி வலய பிரதிக்கல்விப் பணிப்பாளர் பத்மநாதன் நிகழ்த்தினார். சிறப்புரையை புலிகளின்குரல் நிகழ்ச்சித் தயாரிப்பாளரும், படைப்பாளருமான நா.யோகேந்திரநாதன் நிகழ்த்தினார்.

நூலுக்கான அறிமுக உரையை புலிகளின்குரல் நிறுவன படைப்பாளரும், நிகழ்ச்சித் தயாரிப்பாளருமான ஆதிலட்சுமி சிவகுமார் நிகழ்த்தினார். ஆய்வுரையை ஆசிரிய ஆலோசகர் பெ.கணேசன் நிகழ்த்தினார்.

சிறப்புப் பிரதியை புலிகளின்குரல் நிறுவன துணைப்பொறுப்பாளர் வீ.செயல்வீரன் வழங்க, கிளிநொச்சி மகாவித்தியாலய அதிபர் யோகநாதன் பெற்றுக் கொண்டார்.



இராமநாதபுரம் மேற்கு அரசினர் தமிழ் கலவன் பாடசாலையில் இல்ல விளையாட்டுப் போட்டியில் விநோத உடைப்போட்டியில் பங்குபற்றிய மாணவர்களை படத்தில் காணலாம்.

படம் - வே.சீலன்

# செந்தளிர் இல்லச் சிறுவர்கள் மலர்சோலை தாய்சேய் நிலையத்தில்

(முல்லைத்தீவு)

சுனாமி காரணமாக முல்லைத்தீவு மாவட்டத்தில் இயங்கி வந்த செந்தளிர் இல்ல சிறுவர்கள் தற்போது கைவேலி பிரதேசத்தில் வைத்து பராமரிக்கப்பட்டு வருகின்றனர்.

ஏ - 35 முல்லைத்தீவு - பரந்தன் வீதியிலுள்ள கைவேலி பிரதேசத்தில் - மலர்சோலை தாய்சேய் இல்லத்தின் வளாகத்தில் தற்போது இயங்கிவரும் செந்தளிர் சிறுவர் இல்லத்தில் 70 சிறுவர்கள் பராமரிக்கப்பட்டு வருகிறார்கள்.

இங்கு சுனாமி ஏற்பட்ட சமயம் முல்லைத்தீவு செந்தளிர் இல்லத்தில் இருந்து தப்பிய 30 சிறுவர்களும், சுனாமி ஏற்பட்ட சமயம் விடுமுறையில் வீடுகளுக்கு சென்றிருந்த 22 சிறுவர்களும், புதிதாக இணைந்துள்ள சிறுவர்களுமாக மொத்தம் 70 சிறுவர்கள் தற்காலிகமாக அமைக்கப்பட்ட 5 கொட்டகைகளில் வைத்து பராமரிக்கப்படுகின்றனர்.

இது தொடர்பாக செந்தளிர் இல்லத்தின் இயக்குனரான ப.பிரமிளா கருத்துத் தெரிவிக்கையில்-

இங்கு பராமரிக்கப்படும் சிறுவர்களுக்கான உதவிகளை பெண்கள் அபிவிருத்தி மேம்பாட்டு நிறுவனம் செய்துவருகிறது. சுனாமி ஏற்பட்ட சமயம் முல்லைத்தீவு செந்தளிர் இல்லத்தில் 175 சிறுவர்கள் இருந்தனர். அவர்களில் 30 சிறுவர்கள் மட்டுமே உயிருடன் மீட்கப்பட்டுள்ளனர். இவர்களில் பலரும் சுனாமி தாக்கத்தின் நேரடியான பாதிப்புக்குள்ளானவர்கள். காணாமல் போன சிறுவர்களில் 30 பேரின் சடலங்கள் மட்டுமே மீட்கப்பட்டன. ஏனையவர்களின் நிலை என்ன என்று இதுவரை தெரியாமல் உள்ளது எனத் தெரிவித்தார்.

தற்போது இங்குள்ள சிறுவர்களை தற்காலிக கொட்டகைகளில் வைத்து பராமரித்து வருவதால், மழை ஏற்படும் போது சிறுவர்கள் பாரிய அளவில் பாதிப்புக்குள்ளாகி வருகின்றனர்.

இங்கு பராமரிக்கப்பட்டு வரும் சிறுவர்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதற்கு தொழிற்பயிற்சிகளும் அளிக்கப்படவிருக்கிறது. இது அவர்கள் பெரியவர்களானதும் அவர்களுக்கு உதவியாக இருக்கும் என அவர் மேலும் தெரிவித்தார்.

# அன்னை பூபதியின் நினைவுநாள் நிகழ்வுகள்

(வவுனியா)

வவுனியா மாவட்டத்தில் அன்னை பூபதியின் நினைவு தினத்தை முன்னிட்டு கிராம ரீதியான சிரமதான பணிகள்மேற் கொள்ளப்பட்டு வருகின்றன. நேற்றுமுன்தினம் கோவில் குளம் சிதம்பரபுரம் ஆகிய பகுதிகளில் மக்களுடனான கருத்துப்பகிர்வு இடம்பெற்றது.

எதிர்வரும் 17, 18, 19 ஆம் திகதிகளில் வவுனியாவில் பிரதேச ரீதியில் உண்ணாவிரதமும், சிரமதானப் பணிகளும் இடம்பெறவுள்ளதாகவும், எதிர்வரும் 19 ஆம் திகதி வவுனியா தாளிக்குளம் பகுதியில் இறுதிநாள் நிகழ்வுகள் இடம்பெற இருப்பதாகவும், வவுனியா மாவட்ட அரசியற்துறையினர் தெரிவித்துள்ளனர்.

# அரும் பொருள் மையங்கள் அழிந்துபோகாமல் பாதுகாக்க வேண்டியது அனைவரதும் கடமையாகும்

## கிளிநொச்சி மாவட்ட அரச அதிபர் தி.இராசநாயகம்

(கிளிநொச்சி)

கிளிநொச்சி மாவட்டத்திலுள்ள அரும்பொருள் மையங்கள் சீரழிந்து போகாமல் பாதுகாக்க வேண்டியது அனைவரதும் கடமையாகும் என கிளிநொச்சி மாவட்ட அரச அதிபர் தி.இராசநாயகம் தெரிவித்தார்.

கிளிநொச்சி அரச செயலகத்தில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற கல்விக் குழுக் கூட்டத்துக்குத் தலைமை வகித்து உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவிக்கையில் -

கிளிநொச்சி மாவட்ட கல்வி நிலையை உயர்த்துவதற்கு சகல முயற்சிகளையும் எடுத்து வருகிறோம். ஆனால் அரச உதவிகள் முழுமையாகக் கிடைக்காமையால், சகல அபிவிருத்திப் பணிகளும் மந்தகதியில் இடம்பெறுகின்றன. சில அபிவிருத்திப் பணிகளை முன்னெடுக்க எம்மிடம் அதிகாரங்கள் இல்லாதுள்ளது எனத் தெரிவித்தார்.

கிளிநொச்சி மாவட்டத்தில் நடைபெறுகின்ற சகல அபிவிருத்திப் பணிகளிலும், அரச அதிகாரிகள் அர்ப்பணிப்புடன் உழைக்கவேண்டும். அத்துடன் அண்மைக்காலமாக எமது மாவட்டத்தில் காணப்படும் அரும் பொருள் மையங்கள் அழிந்துபோகும் நிலை காணப்படுகிறது. அந்த அரும் பொருள் மையங்களைப் பாதுகாக்க வேண்டிய பணி எல்லோருக்கும் உள்ளது என அவர் மேலும் தெரிவித்தார்.

நமது ஈழநாடு
267, Navalar Road, Jaffna.
T.P. - 021-2225107 www.eezhanaadu.com

**சிந்தனைக்கு**

*செவிகைப்பச் சொல்பொறுக்கும் பண்புடை வேந்தன்*
*கவிகைக்கீழ்த் தங்கும் உலகு.*

திருக்குறள்

# நமது நோக்கு

## மனிதஉரிமை ஆணையகக் கூட்டத்தொடர் உலகிற்கு வெளிப்படுத்தியுள்ள செய்தி!

தற்போது ஜெனிவாவில் நடைபெற்றுவரும் ஐக்கிய நாடுகள்சபை மனிதஉரிமை ஆணையத்தின் அறுபத்தோராவது கூட்டத்தொடர் ஈழத்தமிழர்களைப் பொறுத்த வரையில் முக்கியத்துவமிக்க ஒன்றாகியுள்ளது.

இந்தக் கூட்டத்தொடர் இலங்கை தமிழ்பேசும் இனத்தவரின் சகலபிரச்சினைகளையும் சர்வதேச சமூகத்தின் ஆளமான அவதானிப்புக்கு கொண்டுவரும் வகையில் பல முக்கிய கருத்துக்களை தெளிவாகவும், அழுத்தமாகவும் முன்வைத்துள்ளது என்றே கூறவேண்டும்.

கடந்த 18.03.2005 இந்தக் கூட்டத் தொடரில் மனித உரிமைகள் தொடர்பான கலந்துரையாடல் நிகழ்வு ஆரம்பமானபோது, மக்களின் விடுதலைக்கும் உரிமைக்குமான சர்வதேச நிலையத்தின் பொதுச் செயலாளரான வெரணா விபராப் உரையாற்றும் போது, ஐக்கிய இலங்கைக்குள் ஒன்றுபட்டு வாழமுடியுமென்ற நம்பிக்கையை தமிழ் மக்கள் முற்றாக இழந்து விட்டார்களென்றும், போர் காரணமாக உள்நாட்டிலேயே இடம்பெயர்ந்து நிலையற்ற வாழ்வை பல்லாண்டுகளாக அலைந்தலைந்து வாழும் மக்கள் தங்களின் சொந்த - பாரம்பரிய - வதிவிட நிலத்தில் வாழமுடியாத நிர்க்கதிக்குள்ளாகியுள்ளனர் என்றும் விபரித்திருந்தார்.

2002 ஆம் ஆண்டு ஆட்சிமாற்றம் ஏற்பட்டு சமாதான முயற்சிகளுக்கான நகர்வுகள் மேற்கொள்ளப்பட்டபோது, தமிழ் மக்களிடம் இருந்த நம்பிக்கையானது மீண்டும் 2004 ஆம் ஆண்டு மற்றுமோர் ஆட்சிமாற்றம் ஏற்பட்டபின்னர் இல்லாது போய்விட்டது. மக்களின் எதிர்ப்பார்ப்புகளை நியாயபூர்வமான, மனந்திறந்த பேச்சுவார்த்தைகளின் மூலம் ஏற்படுத்தக் கூடியதான ஒரு இறுதியும், உறுதியுமான அரசியல் தீர்வொன்றின் மூலம் நிறைவேற்றக் கிடைத்துள்ள கிடைத்தற்கரிய வாய்ப்பினை அரசு நேர்மையாகவும், பொறுப்புணர்வுடனும் பயன்படுத்த தவறிவிட்டதாலேயே தமிழ்மக்கள் இலங்கையரசின் மீதான நம்பிக்கையை குழிதோண்டி புதைக்கும் நிலை ஏற்பட்டுள்ளது என்பதை வெரணா விபராப் மிகவும் தெளிவாக புரிந்துகொண்டதாலேயே அவ்வாறு கருத்துக்களை முன்வைக்க வேணடியதாயிற்று.

இதனையடுத்து இதே கூட்டத் தொடரில் சர்வதேச ஜனநாயக வழங்கறிஞர் சங்கத்தின் சார்பில் உரையாற்றிய டியேற்றி மக்கோணல் என்பவர் - ஈழத் தமிழரின் இன்னல்மிகு உண்மை நிலையை அறிய ஐ.நா சபையானது ஒரு விசேட குழுவொன்றை இலங்கைக்கு அனுப்பி வைக்க வேண்டுமென்று கோரிக்கை ஒன்றை விடுத்திருந்தார்.

சுனாமியால் பாதிப்புக்குள்ளாகி அவலப்படும் ஈழத் தமிழர்கள் அளவிடமுடியாத துன்பங்களுக்குள்ளாகி வருகின்ற போதும் இலங்கைஅரசு அவர்கள்மீது அக்கறை கொண்டு உதவுவதாக இல்லை என்பதால், அவர்களுக்குரிய உதவிகளை ஆராய்ந்து அறிந்து வழங்க ஐ.நா. ஒரு குழுவை விசேடமாக அனுப்பிவைக்க வேண்டுமென அவர் தனது உரையில கோரியிருந்தார்.

அவரது அந்த உரையில் சுதந்திரமடைந்த காலம் முதல் ஈழத்தமிழ்மக்களின் உரிமைகளும், சுதந்திரமும் மறுக்கப்பட்டு வந்துள்ளதை தெளிவுபடுத்தியதுடன், மொழி, கல்வி, தொழில், நிலம், பிரஜாவுரிமை போன்ற அனைத்து விடயங்க ளிலும் அவர்களுக்கான உரிமைகள் மறுக்கப்பட்டு, ஒடுக்கப்பட்டு வந்த வரலாற்றை விபரித்துமிருந்தார். அரச படைகளின் மனித உரிமை மீறல்கள் பற்றியும் விளக்கிய அவர், தமிழ் மக்களுக்கெதிரான யுத்தத்தின் போதான படைத்தரப்பினரின் கொடூர அராஜகச் செயற்பாடுகளையும், புள்ளிவிபரங்களுடன் சுட்டிக் காட்டியமை குறிப்பிடத்தக்க ஒன்றேயாகும்.

இதனையடுத்து இதே தொடரில் கலந்துகொண்டு தமது முறைப்பாட்டை முன்வைத்துள்ள சர்வதேச தமிழர் கூட்டமைப்பானது - தனது மகஜரில் 'நாட்டின் பாரிய பொருளாதார நெருக்கடியைக்கூடக் கவனத்தில் கொள்ளாமல் அரசானது பெருமளவு நிதியைச் செலவிட்டு கனரக ஆயுதங்களையும், போர்த்தளபாடங்களையும் வாங்கிக்கு வித்து வருவதுடன், படைத் தரப்பினரின் எண்ணிக்கையை அதிகரித்து, அவர்களின் போரிடும் வலுவை மேம்படுத்த பயிற்சிகளையும் அளித்து, பாரியயுத்தம் ஒன்றை தமிழருக்கெதிராக மேற்கொள்ளத் தயாராகி வருகின்றது எனக் குறிப்பிட்டுள்ளனர். அதுமட்டுமல்ல சமாதான முன்னெடுப்புகளுக்கு எந்தவித மான முன்னுரிமையையும் கொடுக்காது அது தொடர்பான சகல செயற்பாடுகளையும் கிடப்பில்போட்டு இழுத்தடிக்கும் அரசு சுனாமியால் பாதிப்புக்குள்ளான தமிழ் மக்களுக்கான மனிதாபிமானப் பணிகளில்கூட மாற்றாந்தாய் மனப்பான்மையுடன் செயற்பட்டுவருவதையும் அந்த மகஜரில் அவர்கள் தெளிவுபடுத்தியுள்ளனர்.

இவையாவும் உலகுக்கு சொல்லும் செய்தி ஒன்றே ஒன்றுதான்.

இலங்கை அரசு மனித உரிமைகள் விடயத்தில் எந்தக்கட்டத்திலும் நேர்மையாக நடக்கப்போவது கிடையாது என்பதே அதுவாகும்.

இந்த நிலையில் தமிழர்கள் எத்தனை காலத்துக்கு உரிமைகளற்ற அவலவாழ்வில் அல்லல்படுவதாம்?

எலலையற்ற பொறுமை என்பது பெருந்தொல்லைகளுக்கே வழிவகுக்கும் என்ற அனுபவ யதார்த்தத்தை, சமாதானத்தை வலியுறுத்துவோர் இந்தக் கட்டத்தில் புரிந்துகொள்வது அவசியமானதாகும்.

# நாடும் நடப்பும்




### ‘ஊர்சுற்றி’யார் பார்வையில்...

# படகு சுட்டதா? படகின் மீது சூடா? போர் நிறுத்தம் நீடிக்குமா?

“போர்நிறுத்தம் என்றால் என்ன?” இப்படிக் கேட்டார் என் முன் அமர்ந்திருந்த நண்பர் பரமசிவம்.

“சுடுவதை நிறுத்துவது” என்பதுதான் ஆங்கிலத்தில் இதற்குச் சொல்லப்படும் அர்த்தம் என்றேன்.

அப்படித்தான் விளக்கம் சொல்லுவார்கள். ஆனால் போர் செய்து களைத்துப்போன இருதரப்புப் போராளிகளும் ஓய்வெடுத்து மீண்டும் அடுத்தபோருக்கு ஆயத்தமாவதும் எழுதப்படாத விதியாக போர் நிறுத்தத்துக்குச் சொல்லப்படும் அர்த்தம் ஒன்றும் இருக்கு என்றார் பரமசிவம்.

அதெப்படி என்று கேட்டேன்.

போர்புரிந்துவந்த இருதரப்பும் போர் நிறுத்த உடன்பாடு ஏற்பட்டதும் இருபகுதியிலும் தங்கள் தங்கள் பகுதியில் தாங்கள் அமைத்துக்கொண்ட முகாம்களிலேயே இருப்பார்கள். போர் நிறுத்த உடன்பாட்டில் இருதரப்புப் படைகளும் தங்கள் பகுதிகளிலிருந்து விலக்கிக்கொள்ளப்படவேண்டுமென்று ஏற்றுக்கொண்டிருந்தால், இருதரப்பும் அடுத்து சமாதான முயற்சிகளுக்குத் தயாராக இருப்பதாக அர்த்தப்படும். இல்லையேல் போர்நிறுத்தத்தின்பின் இருதரப்பும் குறிப்பிட்ட சில தூரத்துக்குத் தங்கள் முகாம்களை விலக்கிக்கொள்ள வேண்டுமென்று இருதரப்பும் ஒப்புக்கொண்டிருந்தாலும் போர்நிறுத்தம் நீடிக்கவும், சமாதான முயற்சிகள் தொடரவும், ஒரு வாய்ப்பாகக் கருதப்படும். இருதரப்பும் தாங்கள் போர்புரிந்து வந்த நிலையிலேயே போரை நிறுத்திவைப்பதற்கு இணங்கிச் செய்யப்படும் உடன்படிக்கையும் போர்நிறுத்த ஒப்பந்தம்தான். ஆனால் இது எந்த நேரமும் அடுத்த போருக்கு ஆயத்தம் செய்வதாகவே அமைந்திருக்கும். இருதரப்பும் போர் நிறுத்தகாலத்தில் ஆயத்தம் செய்வதே வழமையாக வும் இருந்து வருகிறது என்றார் பரமசிவம்.

போரை நிறுத்தியிருக்கும்போது எப்படி அடுத்த போர் ஒப்பந்த விதிமுறைகளை மீறித் தொடங்கமுடியும்? அதாவது இப்போது இலங்கை அரசும் - விடுதலைப் புலிகளும் செய்துகொண்டுள்ள போர்நிறுத்த உடன்படிக்கையின்படி, எந்தத் தரப்பானாலும் போர் நிறுத்தத்தைக் கைவிடுவதானாலும், ஒப்பந்தத்தை மீறுவதானாலும் பதினான்கு நாட்களுக்கு முன் அறிவித்தல் கொடுக்கவேண்டுமே என்று சொன்னேன்.

அது சரிதான். ஒப்பந்த விதிமுறை இதுதான். ஆனால் எல்லையில் நிற்கும் இருதரப்பினரும் நேருக்குநேர் பார்த்துக்கொண்டிருக்கையில் அமைதியாக நிற்பார்கள். ஆனால் எல்லையிலிருந்து தூரத்தில் இருதரப்புப் போராளிகளும் நேருக்குநேர் பார்க்காத இடத்தில் எந்தவொரு தரப்பின் மீதும் தாக்குதல் நடைபெறலாம். இது இருதரப்பையும் சேராத ஒரு தரப்பிலிருந்தும் நடைபெற லாம். இந்தத் தாக்குதல் நடந்ததும் தாக்கப்பட்ட தரப்பு இலக்கில் லாமலே திருப்பித் தாக்கக்கூடும். அல்லது தொடர்ந்தும் தாக்கக் கூடும். இந்தச் சமயத்தில் தாங்கள் தாக்கப்பட்டபடியால்தான் திருப்பித் தாக்கியதாக இருதரப்பும் சொல்லக்கூடும். முதல் தாக்குதல் எங்கிருந்து வந்தது, யார் தாக்கியது என்பது தெரியா மலே ஒருவர் மீது ஒருவர் அவர்தான் முதல் தாக்கினார் நாங்கள் திருப்பித்தாக்கினோம் என்று குற்றஞ்சாட்டுவர். இதுதான் போர் நிறுத்தம் முறிவடைவதற்கு முதல்படியாகவும் அமையும் என்றார் பரமசிவம்.

இப்போது திருகோணமலையில் கிண்ணியா உப்பாறு கரையோரத்துக்கு வந்த கடற்படைப் படகொன்று தங்கள் மீது தாக்குதல் நடத்தியதையடுத்து தாங்களும் அந்தப் படகின்மீது பதில்தாக்குதல் நடத்தியதாக விடுதலைப் புலிகள் தரப்பில் தெரிவிக்கப்பட்டதாக செய்திகள் தெரிவிக்கின்றன. இதேசமயம் உப்பாறு கரையோரத்தில் ரோந்து நடவடிக்கையில் ஈடுபட்ட தங்கள் படகின் மீது விடுதலைப் புலிகள் தாக்குதல் நடத்தியதாகவும் படகு சிறு சேதத்துக்குள்ளானதாகவும் கடற்படையினர் தெரிவித்திருக்கின்றனர். கண்காணிப்புக்குழு உறுப்பினர் ஒருவரும் காயமடைந்ததாகவும் அவர்கள் தெரிவித்துள்ளனர். ஆனால் துப்பாக்கிச் சூட்டில் கண்காணிப்புக்குழு உறுப்பினர் காயமடையவில்லையென்று கண்காணிப்புக்குழு அதிகாரி ஒருவர் தெரிவித்திருக்கிறார் என்று சொன்னேன்.

இருதரப்பும் கண்காணிப்புக்குழுவிடம் புகார் தெரிவித்திருக்கின்றனர். கண்காணிப்புக்குழு இதுபற்றி விசாரணை செய்யும். விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுக் கரையோரப் பகுதிக்குக் கடற்படைப் படகு எதற்காகச் சென்றது? என்ற கேள்வி எழலாம். கடந்த சில மாதகாலமாகவே படைத்தரப்பினரும் அரச தரப்பினரும் புலிகளின் படைபலம் பற்றி விமர்சிப்பதும், தரைப்பகுதியில் விடுதலைப் புலிகளைச் சீண்டுவதாயுமிருந்து வருகின்றனர். பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் ரத்தினசிறி விக்கிரம நாயக்கவும் போர் முரசு கொட்டியிருக்கிறார். இதனால் துப்பாக்கிப் பிரயோகச் சம்பவங்கள் நல்ல அறிகுறியாகத் தெரியவில்லை என்றார் பரமசிவம்.

கடந்த காலங்களில் போர் நடந்த நாடுகளில் இப்படித்தான் துப்பாக்கி வெடிப்பதும், ஒருவர் மீது ஒருவர் குற்றஞ்சாட்டுவதும் பின்னர் மீண்டும் அது போராக உருவெடுப்பதும் நடந்த நிகழ்வுகள் என்றேன்

இதுக்குத்தான் படைத்தரப்பும், அரசதரப்பும் அவதிப்படுவது போலத் தெரிகிறது என்றார் பரமசிவம்.

இந்தியாவுடன் பாதுகாப்பு ஒப்பந்தம் ஒன்றைச் செய்து கொள்வதற்கு அமைச்சர் கதிர்காமர் எடுத்த முயற்சியும், சந்திரிகா அம்மையார் வைத்திருந்த நம்பிக்கையும் வீணாகிவிட்டதாகத் தெரிகிறதே என்று பரமசிவத்திடம் கேட்டேன்.

இந்த ஒப்பந்தத்துக்கு முதலில் அடி எடுத்துக் கொடுத்தது ஐக்கிய தேசிய முன்னணியின் தலைவரும் பிரதமந்திரியாகவுமிருந்த ரணில் விக்கிரமசிங்க தான். அவர் அமெரிக்காவுக்கும் போனார். விடுதலைப் புலிகளுக்கெதிராக உலக நாடுகள் பலவற்றையும் சேர்த்து வலைப்பின்னல் ஒன்றை உருவாக்கினார். ஆனால் அவர் தான் தன்னையும், தனது ஆட்சியையும் பாதுகாப்பதற்கு வலைப்பின்னல் அமைத்துக் கொள்ளத் தவறிவிட்டார். அவர் தொடக்கி வைத்த இந்தியாவுடனான பாதுகாப்பை நிறைவேற்றுவதற்கு சந்திரிகா அம்மையாரும் ஆசைப்பட்டார். இதில் கைச்சாத்திடலாமென்ற நம்பிக்கையுடன் புதுடெல்கிக்கும் போனார். கதிர்காமர் புதுடெல்கிக்குச் சென்று தமது சாமர்த்தியத்தைக் காட்டினார். இந்தியப் பிரதமர் கொழும்புக்கு வருவார் என்று கதிர்காமர் வந்து சொன்னார்.

கொழும்புக்கு வரும் போது ஒப்பந்தத்தில் கைச்சாத்திடுவார் என்றே எதிர்பார்க்கப்பட்டது. ஆனால் அவரது வருகை தள்ளிப்போய்க்கொண்டிருப்பது சந்தேகத்தைத் தோற்றுவித்துள்ளது. இதுமட்டுமல்ல இலங்கையுடன் இந்தியா பாதுகாப்பு ஒப்பந்தம் செய்து கொள்ளாது என்று வைகோ உறுதிபடத் தெரிவித்திருக்கிறார். ஆனாலும் என்ன இலங்கைக்கு எப்போதும் பல உதவிகளைச் செய்ததும், ரி 56 என்ற புதியரக துப்பாக்கிகளை முதலில் ஜே.வி.பி கிளர்ச்சிக்கு எதிராகவும், பின் இப்போது விடுதலைப் புலிகளுக்கு எதிராகவும் உபயோகிக்கக் கொடுத்ததும் சீனக் குடியரசு தான். அந்த நாட்டின் பிரதமர் நாளை கொழும்புக்கு வருகிறார். அவரை உற்சாகமாக வரவேற்று பல ஒப்பந்தங்களைச் செய்வதற்கு இலங்கை அரசு தயாராக இருக்கிறதென்று சொல்லிவிட்டுப் புறப்பட்டார் பரமசிவம்.

அரசியல் பரணி

# ஐ.நா. செயலர் பதவிக்குப் போட்டியிட ஜயந்த தனபால தகைமையுடையவரா?



இரண்டாவது உலகப் பெரும் போரின் விளைவுகளால் சமாதானத்தை ஏற்படுத்தவென அமைக்கப்பட்டது தான் ஐக்கிய நாடுகள் சபை. இது பல்வேறு கிளைகளைப் பரப்பிப் பல்வேறு மனிதநேய வளர்ச்சிகளை வளர்த்து வருகின்றது. இது அமைக்கப்பட்ட அடிப்படை நோக்கமான சமாதானப் பணியில் எவ்வளவு வெற்றியைப் பெற்றது என்பது ஆய்வுக்குரியதாகவே உள்ளது.

அப்பொழுதிருந்த உலக ஒழுங்கின்படி, 'நீக்கும்' அதிகாரத்தைக் கொண்ட பலமான உறுப்பாக - ஐக்கிய அமெரிக்கா, சோவியத் ஒன்றிம், பிரித்தானியா, பிரான்ஸ், சீனா ஆகிய நாடுகள் கருதப்பட்டன. இதில் வேடிக்கை என்னவென்றால் சீனாவில் ஏற்பட்ட புரட்சிக்குப் பின்னர், தாய்வான் என்று அழைக்கப்படும் குட்டித் தீவே சீனாஎன்ற பெயரில் பாதுகாப்புச் சபையில் உறுப்பாக இருந்தது. மக்கள் சீனக் குடியரசான சனத்தொகையில்அதிகம் கொண்ட நாடு ஐக்கிய நாடுகளவையில் உறுப்பினராக இல்லாமல் இருந்தது. மக்கள் சீனக் குடியரசு இதைப் பற்றி அலட்டிக் கொள்ளவில்லை. பல ஆண்டுகளின் பின் ஹென்றி கீசிங்கர் அமெரிக்க வெளியுறவுச் செயலராக வந்த பின்னரே சிறிய நாடான தாய்வான் அகற்றப்பட்டு, மக்கள் சீனக் குடியரசுக்கு இடம் கொடுக்கப்பட்டது. இதைத் தவிரப் பெரிய மாற்றங்கள் ஐ.நா. சபையில் ஏற்படவில்லை. சோவியத் ஒன்றியம் சிதைவடைந்த அதன் இடத்தை உடனே ரஷ்யாவிற்கு வழங்கினர். சீனாவைச் சேர்ப்பதற்கு கால இழுத்தடிப்பு, ரஷ்யாவைச் சேர்ப்பதற்கு அவசரமும் காட்டப்பட்டது ஏன் என்பது அமெரிக்காவுக்குத்தான் தெரியும்.

தற்பொழுது ஐ.நா அமைப்பில் சீர்திருத்தங்கள் செய்யப்பட வேண்டும் என்று குரல் கொடுக்கப்படுகின்றது. இந்தச் சீர்திருத்தங்களை முன்னெடுக்கப் பாடுபடுவதாகதற்போதைய ஐ.நாவின் தலைமைச் செயலாளர் கொபி அனான் கூறுகிறார்.

ஆனால் இவரின் பதவிக் காலம் 2006 ஆம் ஆண்டு இறுதியுடன் முடிவடைகிறது. இந்தப் பதவியில் அடுத்த முறைக்கும் இவரைத் தொடர விடுவார்களா? அல்லது புதியவர் தேர்ந்தெடுக்கப்படுவாரா? என்பது தெரியவில்லை. ஆனால் பலர் இத்தலைமைச் செயலாளர் பதவிக்குப் போட்டி போட முன்வந்துள்ளனர் என்பது மட்டும் உண்மையாகும்.

### ஓரங்கட்டப்பட்ட ரிரோன் பெர்னாண்டோ

ஐக்கிய தேசியக் கட்சியில் நீண்டகாலம் உறுப்பினராக இருந்தவர் ரிரோன் பெர்னாண்டோ. அமைச்சரவையிலும் இருந்தவர். கடைசியாக ரணிலின் அரசில் 2004 ஆம் ஆண்டு தேர்தல் வரை வெளிநாட்டலுவல்கள் அமைச்சராகப் பணியாற்றியவர். அப்பொழுதே ஐ.நா தலைமைச் செயலாளர் பதவிக்குப் போட்டியிடப் போவதாகக் கூறி ஆதரவு திரட்டியவர் இவர். ஆசிய நாட்டவர் ஒருவருக்கே இந்த முறை ஐ.நா தலைமைச் செயலாளர் பதவி உரியதாகும்.

எனவே இலங்கை சார்பில் போட்டியிட அவர் விரும்பினார். ஆனால் ரணிலின் ஆட்சி அப்புறப்படுத்தப்பட்டதால், இவர் நிலைமை தர்மசங்கடமானது. எனவே இவர் ஐக்கிய தேசியக் கட்சியை விட்டு விலகி சந்திரிகாவின் ஆளும் கட்சிக்குத் தாவினார். அப்பொழுது அவர் கூறியது இங்கு கவனிக்கப்பட வேண்டியதாகும்.

ரணில் புலிகளுக்கு அதிகம் விட்டுக் கொடுத்துச் சமாதான ஒப்பந்தம் செய்து விட்டார். சந்திரிகாவின் அணுகுமுறையே சரியானது என்றபடியால் தான், ஐ.தே கட்சியை விட்டு விலகுவதாகவும் கூறியிருந்தார். இவ்வகையான இன விரோதச் சிந்தனையை தன்னகத்தே கொண்டவர், பொறுப்புள்ள ஐ.நா தலைமைச் செயலாளராகப் போட்டியிட முன்வந்தால் எப்படி இருக்கும்.

ஆனால் சந்திரிகா நம்பியது போல் காட்டிக் கொண்டாலும், அவரை அந்தப் பதவிக்கு நிறுத்த விரும்பவில்லை. எனவே வடக்கு -கிழக்குப் பகுதிகளின் ஆளுநராக அவரை நியமித்து ஓரங்கட்டிவிட்டார்.

### சந்திரிகாவின் விருப்பு

அரசமைத்த சந்திரிகா சமாதான ஒப்பந்தத்தை மீற முடியாத நிலையில் சமாதானச் செயலகப் பணிப்பாளராக இருந்த பேனாட் குணதிலகவுக்குப் பதிலாக ஜயந்த தனபாலவை நியமித்தார். நாட்டில் சமாதானத்தை இந்தச் செயலகம் கொண்டு வருகிறதோ இல்லையோ கவலையில்லை. ஆனால் ஜயந்த தனபால சமாதானச் செயலகத்தில் பணிபுரிபவர். முன்னர் ஐக்கிய நாடுகள் அவை யில் இலங்கையின் நிரந்தரப் பிரதிநிதியாக இருந்தவர் என்ற முகவரியுடன் ஐ.நாவின் தலைமைச் செயலாளர் பதவிக்கு நிறுத்தப்பட்டுள்ளார். இதை இலங்கை அரசும் உத்தியோக ரீதியாக அறிவித்து விட்டது.

தனது நம்பிக்கைக்குரிய ஒருவர் - சிங்கள பௌத்தர் - ஐக்கிய நாடுகள் சபையின் தலைமைச் செயலாளராக வருவதையே சந்திரிகா விரும்புகின்றார். அதற்காகவே ஜயந்த தனபாலவை அவர் முனமொழிந்து ஆதரவு தேடும் படலத்தையும் தொடங்கியுள்ளார்.

இதே நேரம் வரலாற்றையும் திருப்பிப்பார்க்க வேண்டும். பல ஆண்டுகளுக்கு முன்னர் ஐ.நா பொதுச் சபைத் தலைவர் பதவிக்குச் இலங்கை பௌத்த காங்கிரசின் தலைவர் ஜி.பி.மலலசேகரா போட்டியிட முன்வந்தார். இலங்கைத் தீவு முழுமையான பௌத்த சிங்கள நாடு. இங்கு வேறெவருக்கும் இடமில்லை என்ற கோட்பாட்டைக் கொண்டது இலங்கை பௌத்த காங்கிரசாகும். இதன் தலைவர் ஜி.பி.மலலசேகரா இந்தக் கோட்பாட்டை உலகெங்கும் கொண்டு செல்வதில் முன்னின்று செயற்பட்டவர். தமிழ் மக்கள் தமது உரிமைகளுக்காகக் குரல் கொடுக்கப் போராட்டங்கள் நடத்தத் தொடங்கிய காலம் இந்தக் காலகட்டமாகும். தமிழர்களின குரலை வெளிநாடுகளில் கேட்கவிடாது செய்வதற்கான முயற்சிகளில் ஒன்றாக ஜி.பி.மலலசேகராவை ஐநாவின் நிரந்தரப் பிரதிநிதியாக இலங்கை அரசு நியமித்தது. இவர் ஐ.நா பொதுச்சபையின் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டால் தனது இன ஒழிப்பை மூடி மறைக்கலாம் என்று அரசு கணக்குப் போட்டது. ஆனால் அவர்களது திட்டம் தோற்றுப் போய்விட்டது. இதுவெறும் பொதுச் சபைத் தலைவர் பதவி பற்றியதேயாகும்.



தற்பொழுது சிங்களம் கண்வைத் திருப்பதோ மிகவும் கனதியான தலைமைச் செயலாளர் பதவியாகும்.

ஈராக் மீது மேற்கொள்ளப்பட்ட யுத்தம் போல் மீண்டும் தவறுகள் ஏற்படக் கூடாது, தேசிய இனங்களின் எழுச்சிகளுக்கு விடை காண வேண்டியது, அடிப்படை மனித உரிமைகள் முறையாகப் பின்பற்றுவது, பாதுகாப்புச் சபையின் விரிவாக்கம், நீக்கும் அதிகாரப் பயன்பாடு என்பன போன்ற பல்வேறு சர்திருத்தங்கள் தேவைப்படுவதாகக் கருதபபடும் நேரத்தில் - பேரினவாத, மதவாதச் சிந்தனைகளுக்குள் மூழ்கியிருக்கும் சிங்கள அரசின் தூதுவர் இந்தப் பொறுப்பான பதவிக்குத் தகுதிபடைத்தவராக முடியுமா?

ஐ.நாவின் செயலாளர் நாயகம் சுனாமி பாதித்த தமிழ்ப் பகுதிகளுக்குச் செல்ல விருந்ததைத்தடை செய்தது சிங்கள அரசு. அந்த அரசின் கருத்தை நியாயப்படுத்தியவர் ஜயந்த தனபால. இவர் ஐ.நாவின் தலைமைச் செயலாளராக வந்தால், இந்தப்பதவி எவ்வாறு தவறாகப் பயன்படுத்தப்படும் என்பது தெளிவாகின்றது.

சமாதான முன்னெடுப்புக்களைப் பாதிக்கும் கௌசல்யனின் படுகொலைக்கு அனுதாபமும், கவலையும் தெரிவித்த ஐ.நா செயலாளர் நாயகத்தைக் கண்டனம் செய்தது சந்திரிகா அரசு. எனவே சந்திரிகாவின் நம்பிக்கைக்குரிய ஒருவர் ஐ.நாவின் தலைமைச் செயலாளராகப் பதவியேற்றால், ஒடுக்கப்பட்ட இனங்களின் தேசிய எழுச்சிக்கு ஆதரவாக எவ்வாறு இவர் செயற்படுவார்? அவர் அந்த எழுச்சிக்கு எதிராகச் செயற்படும் ஒருவராகவே இருப்பார் என்பதில் சந்தேகமே இல்லை.

ஒஸ்ரிய நாட்டவரான குட்வால்ஹெய்ம் ஐ.நாவின் தலைமைச் செயலாளராகப் பணியாற்றினார். இவர் ஒஸ்ரிய நாட்டின் பிரதமராகவும் இருந்தார். இவர் யூத இனப் படுகொலைக்கு உதவியதாகவும், அவர் இஸ்ரேல் நாட்டிற்கு வந்தால், இஸ்ரோல் அரசு அவரைக் கைது செய்யத் தயங்காது என்று அப்பொழுது கூறியது. அவ்வாறான நிலையை, கருத்தை இஸ்ரேல்நாடு கடைப்பிடித்தது.

ஐ.நா அமைப்பின் தலைமைச் செயலாளராகவோ, அல்லது அதன் முக்கிய பதவிகளை வகிப்பவர்களே தூய்மையான சிந்தனையுடையவரகளாக இருக்க வேண்டும். அமெரிக்காவின் செல்லப் பிராணியான இஸ்ரேல் நாட்டிற்கெதிராகச் செயற்பட்டவர் எனக் குற்றம் சுமத்தப்படுமளவு அப்போதைய நிலை இருந்தது.

ஆனால் சிங்கள ஆட்சியாளரின் குரலாக ஒலித்தவர் ஜயந்த தனபால. ஆட்சிமாறியதால் அவர் விடுவிக்கப்பட்டுப் புதிய ஆட்சி வேறொருவரை நியமித்தது. ஆனால் சந்திரிகா சமாதானச் செயலகம் என்ற பெயரில் உளள அமைப்புக்கு ஜயந்த தனபாலவைச் செயலாளராக நியமித்ததன் மூலம் அவர் சமாதான விரும்பியாக மாறிவிடமாட்டார். சந்திரிகா தனக்கு வாய்ப்பாக ஒருவரை உருவாக்கி அவரை ஐ.நாவில் பதவி பெற முயற்சிக்கின்றார்.

பேரினவாதச் சிந்தனையுடைய ஆட்சியின் பிரதிநிதியான ஒருவர் தலைமைச் செயலாளராக வந்தால், ஐ.நாமன்றம் இலங்கை நாடாளு மன்றம் போல் காட்சியளிக்குமேயன்றி, அது அந்த மன்றம் தொடங்கப்பட்ட நோக்கங்களை இழக்கவேண்டி வரும். சீர்திருத்தங்கள் என்பதெல்லாம் சீரழிந்து போய், ஆண்டிகள் கட்டிய மடம் போல் ஐ.நாவும் மாறிவிடும்.

---

பகுதி - 77 சங்கர்



# காற்றே! என் கதை கேளாயோ... அலையே! என் நிலை உணராயோ...

இரண்டாவது விடயம், சுனாமியால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு இலங்கையிலேயே முதன்முதல் வீடுகள் அமைத்துக் கொடுக்கப்பட்டன வடக்கு -கிழக்கில் தான் என்றால் பலரும் ஆச்சரியப்படுவர். வடக்கு - கிழக்கு மக்களில் அரசின் கரிசனையை வெளிப்படுத்துகிறது என்று இதற்கு அர்த்தமல்ல.

கொக்கிளாய் பகுதியில் தான் - ஐந்து வீடுகள் முதன் முதலாக சுனாமியால் இடம் பெயர்ந்த மக்களுக்கு வழங்கப்பட்டன. வடக்கு - கிழக்கு ஆளுநர் டிரோன் பெர்னாண்டோ இந்த நிகழ்வில் கலந்து கொண்டு பாதிப்புற்ற சிங்களக் குடியேற்றவாசிகளுக்கு வீடுகளைக் கையளித்தார். இவர் ஐ.தே.க. அரசில் இருந்த காலத்தில்தான் தென்ன மரவடி, கொக்குத்தொடுவாய், கொக்கிளாய் பகுதிகளில் இருந்து காலஅவகாசமின்றித் தமிழ் மக்கள் துரத்தப்பட்டனர். இவ்வாறு துரத்தப்பட்ட மக்கள் சுமார் இருபது வருடங்களாக இடம்பெயர்ந்தோர் என்ற நிலையிலேயே வாழ்ந்து வருகின்றனர். இந்த மக்கள் உள்நாட்டில் இவ்வளவு அவலப்படுவது ஐ.தே. காவின் ஆட்சிக் காலத்திலும் இவரது மனத்தை உறுத்தவில்லை.

சந்திரிகாவின் கட்சியில் இணைந்து ஆளுநராக இருந்த போதும், இந்த விடயம் குறித்து பரிசீலனைக்கே இவர் எடுக்கவில்லை. ஆனால் குடியேற்ற வாசிகள் குறித்த விடயத்தில் இவரும், சந்திரிகா அரசும் மாத்தறை, அம்பாந்தோட்டை, காலியை விட கூடுதல் அக்கறையுடன் செயற்பட்டமை தெளிவாகின்றது.

மேலும் திரியாயில் தன்னை இனாங்காட்டிக் கொள்ள விரும்பாத பிரமுகர் ஒருவர் - தான் கொக்கிளாய்ப் பகுதியைச் சென்று பார்வையிட்டதாகவும், சுமார் 200 புதிய வீடுகள் அங்கு அமைக்கப்பட்டுள்ளதாகவும், சுற்றிவர புதிய தகரங்களால் எல்லைகள் இடப்பட்டுள்ளதாகவும் குறிப்பிட்டார்.

இதேவேளை கிழக்கு மாகாணத்தின் அடுத்த எல்லையான உல்லை கிராமத்தில் இதுபோன்ற விடயங்கள் முக்கியத்துவம் பெறுகின்றன. இது தொடர்பாக கடந்த 24 ஆம் திகதி நாடாளுமன்றில் சிறீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீம் பின்வருமாறு உரையாற்றினார்.

உல்லையில் மீள் குடியேற்றம் என்ற போர்வையில் கடல் அனர்த்தத்தில் பாதிக்கப்படாத ஏனைய பகுதிகளிலிருந்து சிங்களப் பொதுமக்கள் கொண்டுவரப்பட்டு, குடியேற்றப்படுகின்றனர். இந்த நடவடிக்கைகளால் அம்பாறையில் முஸ்லிம்கள் சிறுபான்மையினராகி விடும் அபாயம் தோன்றியுள்ளது. இந்தக் குடியேற்ற நடவடிக்கைகளுக்கு அரச படையினரும் பொலிஸாரும் உதவி புரிந்து வருகின்றனர். உல்லைப் பகுதியில் பெரும்பான்மையினர் முஸ்லிம்கள். அறுகம்பைப் பாலத்துக்குஅப்பால் மட்டும் 48 சிங்களக் குடும்பங்கள் வாழ்ந்து வருகின்றன.

உல்லையில் புத்தர் சிலைகளை நிறுவி கடல் அனர்த்தத்தில் பாதிக்கப்படாத பகுதிகளிலிருந்து அப்பாவிச் சிங்கள மக்களைக் கொண்டு வந்து குடியேற்றி, அந்தப்பகுதி முஸ்லிம்களை மட்டுமல்ல முழு அம்பாறை மாவட்ட முஸ்லிம்களையும் சிறுபான்மையினராக்கும் முயற்சிகள் நடைபெறுகின்றன.

அம்பாறை மாவட்டம் ஏற்கனவே பல திட்டமிட்ட சிங்களக் குடியேற்றங்களையும் சந்தித்த மாவட்டமாகும். இந்தநாட்டில் பல அரசியல் தலைவர்கள் 'மாக்சிய வல்லி கோட்பாட்டைப் பின்பற்றி சிறுபான்மையினர் பெரும்பான்மையாக வாழும் பகுதிகளில் புதிய குடியேற்றங்களை நிறுவி கலவரம் செய்துள்ளனர்.

இதே புளித்துப் போன உத்தியை மீண்டும் உல்லையில் பிரயோக்க முயல்வது ஆரோக்கியமானதல்ல.

குடாக்கல்லி முதலைக் கல் என்ற இடத்தில் நேற்று மீண்டும் சிலை நிறுவும் நடவடிக்கைகள் ஆரம்பித்துள்ள. இவ்வாறு முஸ்லிம்களைப் புன்படுத்தும் வகையில் ஆரவாரமாகச் செய்யும் முயற்சிகளை உடனடியாகத் தடுத்து நிறுத்த வேண்டும். (தொடரும்...)

# பாப்பரசரின் உடல் அடக்கம் மூன்று புனிதப் பேழைகளில்



பாப்பரசர் 2 ஆவது ஜோன் போலின் உடல் வத்திக்கானிலுள்ள புனித பீட்டர் தேவாலயத்தில் நாளை வெள்ளிக்கிழமை 3 புனித பேழைகளில் வைத்து அடக்கம் செய்யப்படுகிறது.

பொதுமக்கள் அஞ்சலி செலுத்தி முடிந்ததும் பாப்பரசரின் உடல் இன்று இரவு மரத்தாலான ஒரு பேழைக்குள் வைக்கப்பட்டு தேவாலயத்துக்குள் கொண்டு செல்லப்படும். அங்கு சிறப்புப் பிரார்த்தனை நடைபெறும். பின்னர் அங்கு அந்தப் பேழை ஒரு துத்தநாகப் பேழைக்குள் வைத்து சீல் வைக்கப்படும். அதன் பின்னர் அந்தத் தாமிரப் பேழையை லுக்மரப் பேழைக்குள் வைத்து மூடுவார்கள். பாப்பரசரின் உடலுடன் அந்தப் புனித பேழைக்குள் அவரது வாழ்க்கைக் குறிப்பு மற்றும் சில பொருட்கள் அடங்கிய பை ஒன்றும் வைக்கப்படும். இறுதியில் புனித பேழை சலவைக்கல் பலகையின் மீது வைத்துப் புதைக்கப்படும்.

பாப்பரசர் போலந்து நாட்டைச் சேர்ந்தவர் என்பதால் அவரது உடலுடன் போலந்து நாட்டு மண்ணையும் சிறிதளவு வைக்க வேண்டும் என்று கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. ஆனால் இந்தக் கோரிக்கை ஏற்கப்படுமா என்பது தெரியவில்லை.

# புதிய பாப்பரசரை அறிவிப்பதற்கு விதிமுறையொன்று புதிதாக சேர்ப்பு!

(வத்திக்கான்)

புதிய பாப்பரசர் தேர்ந்தெடுக்கப்பட்டதும் அதனை அறிவிப்பதற்கு புதிய விதிமுறை சேர்க்கப்பட்டுள்ளதாக வத்திக்கான் ஆர்ச். பிஷப் பீரோ மாரினி தெரிவித்துள்ளார். இந்தப் புதிய விதிமுறை சேர்க்கப்பட்டுள்ள வத்திக்கான் சட்டப் புத்தகத்தையும் அவர் வெளியிட்டுள்ளார்.

இதன்படி புதிய பாப்பரசர் தேர்ந்தெடுக்கப்பட்டதும் சென்பீட்டர்ஸ் தேவாலயத்தின் மணி அடிக்கப்படும் ஏற்கனவே பாப்பரசரைத் தேர்ந்தெடுத்த பின்னர் வெளிவரும் வெண்புகை முறையும் கடைப்பிடிக்கப்படும்.




இதுநாள் வரை புதிய பாப்பரசர் தேர்ந்தெடுக்கப்பட்டதும் அதை மக்களுக்கு அறிவிக்க பாப்பரசரை தெரிவு செய்யும் அறையிலிருந்து வெண்புகை வெளிவிடுவது நடைமுறையாக இருந்தமை குறிப்பிடத்தக்கது.

இதேவேளை பாப்பரசரின் இறுதி நிகழ்வு நிறைவடைந்ததும் புதிய பாப்பரசரை தேர்ந்தெடுப்பதற்காக வாக்களிக்கத் தகுதியான 117 கர்தினால்களும் வத்திக்கான் சென்றுள்ளனர்.

இவர்கள் தங்குவதற்காக சாந்தா மார்த்தா என்ற சொகுசு மாளிகை ஒதுக்கப்பட்டுள்ளது. 130 கோடி ரூபாவிலான இந்த சொகுசு மாளிகையில் பாப்பரசரின் மார்பளவு வெண்கலச்



சிலையும் அமைக்கப்பட்டுள்ளது. சென்பீட்டர்ஸ் தேவாலயத்திற்கு அருகிலேயே இந்த மாளிகை உள்ளது. இந்த மாளிகையிலிருந்து கர்த்தினால்கள் பாப்பரசரை தேர்ந்தெடுக்கும் கூட்டத்திற்கு இலகுவாக செல்ல முடியும். அத்துடன் இது பாதுகாப்பானதாகவும் கருதப்படுகின்றது.

கர்த்தினால்களுக்கு மாத்திரமன்றி அவர்களுடைய வைத்தியர்கள் மற்றும் உதவியாளர்கள் தங்கவும் இங்கு 110 அறைகள் உள்ளன.

### அமெரிக்க ஜனாதிபதி புஷ் உட்பட

# பல நாடுகளின் தலைவர்கள் பாப்பரசரின் இறுதிநிகழ்வில்!



பாப்பரசர் 2 ஆம் ஜோன்போலின் உடல் அடக்கம் நாளை வெள்ளிக்கிழமை நடைபெறவுள்ளது.

இதில் 30 நாட்டுத் தலைவர்கள் பங்கேற்கிறார்கள். இந்தியா உட்பட 200க்கும் மேற்பட்ட நாடுகள் தூதுக் குழுக்களை அனுப்பி வைக்க உள்ளன.

அமெரிக்க அதிபர் ஜோர்ஜ் புஷ் அவரது மனைவி லாரா புஷ் மற்றும் இங்கிலாந்து பிரதமர் ரொனி பிளேயர், இளவரசர் சார்லஸ் ஆகியோரும் வத்திக்கானுக்குச் செல்லவுள்ளனர்.

பாப்பரசரின் இறுதி நிகழ்வில் பங்கேற்க வேண் டிய நிலை ஏற்பட்டதால் இளவரசர் சாள்ஸ் தனது திருமணத்தை ஒரு நாள் ஒத்திவைத்துள்ளார்.

உலக நாடுகளின் ஜனாதிபதிகள், பிரதமர்கள், மன்னர்கள், ராணிகள் ஆகியோரும் பங்கேற்கவுள்ளனர். ஜேர்மன் சான்சிலர் ஜெரார்ட் சிரோதர், அந்த நாட்டு அதிபர் கோச்சலர், பிரான்ஸ் பிரதமர் ஜக்ஸ் சிராக், ஸ்பெயின் மன்னர் ஜுவான் கார் லோஸ், ராணி சோபியா, பிரதமர் சபாட்டெரோ, இத்தாலி பிரதமர் சில் வியோ பெர்லுசனி, அதிபர் கார்லோ சியாம்பி, கனடா பிரதமர் போல் மார்ட்டின் ஆகியமுக்கிய தலைவர்களும் செல்லவுள்ளனர்.

இந்தியா சார்பாக துணை ஜனாதிபதி பைரோன்சிங் செகாவத் குரோஷியா, லெபனான், ஸ்லோவேனியா ஆகிய நாடுகளின் அதிபர், பிரதமர், பிரேசில் சிரியா, பிலிப்பைன்ஸ், லட்வியா, லிது வேனியா, எஸ்தோனியா, சைப்பிரஸ் நாடுகளின் அதிபர்கள், இலங்கை, பலஸ்தீனம் உள்பட பல்வேறு நாட்டு பிரதமர்களும் இந்த இறுதி நிகழ்வில் பங்கேற்கவுள்ளனர்.

சிலி நாட்டு அதிபர் ரிகார்டோ பாப்பரசரின் இறுதிநிகழ்வில் பங்கேற்க வத்திக்கான் செல்வதாக இருந்தார். அவரது 103 வயது தாயாருக்கு திடீர் உடல் நலக்குறைவு ஏற்பட்டதால் பயணத்தை அவர் ஒத்திவைத்து அமைச்சர் ஒருவரை வத்திக்கானுக்கு அனுப்பவுள்ளார்.




### தேசிய நீர் விநியோக வடிகாலமைப்பு சபையில்...

தேசிய நீர் விநியோக வடிகாலமைப்பு சபையில் இருந்து கீழ்க் காணும் பதவிகளுக்கு உரிய கல்வித் தகைமை கொண்ட விண்ணப்பதாரிகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

பயிலுனர் பொறியியலாளர் வெற்றிட எண்ணிக்கை - 04, சொத்து முகாமைத்துவப் பயிலுனர் வெற்றிட எண்ணிக்கை 12, ஆய்வுகூட சேவையாளர் முகாமைத்துவ பயிலுனர் வெற்றிட எண்ணிக்கை - 06, புள்ளி விபரவியல் முகாமைத்துவப் பயிலுநர் வெற்றிட எண்ணிக்கை - 01, தகவல் தொழில்நுட்ப முகாமைத்துவ பயிலுநர் வெற்றிட எண்ணிக்கை - 01, உள்ளக கணக்காய்வு, நிதி முகாமைத்துவப் பயிலுநர் வெற்றிட எண்ணிக்கை - 31, ஆளணி அபிவிருத்தி முகாமைத்துவ பயிலுனர் வெற்றிட எண்ணிக்கை 03, ஆள்வள அபிவிருத்தி முகாமைத்துவ பயிலுனர் வெற்றிட எண்ணிக்கை - 03, சமூகவியல் முகாமைத்துவ பயிலுனர் வெற்றிட எண்ணிக்கை - 03 ஆகிய பதவிகளுக்கே விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

விண்ணப்பதாரிகள் மதிப்பீடு, வியாபார நிர்வாகம், மனிதவள முகாமைத்துவம், புள்ளி விபரவியல், இரசாயனவியல், உயிரியல், பௌதிகவியல், முகாமைத்துவம், கணக்கியலும் நிதியியலும், வர்த்தகம், புள்ளி விபரவியல், சமூகவியல் போன்ற துறைகளில் பொதுப்பட்டம் அல்லது விசேட பட்டம் பெற்றிருத்தல் வேண்டும்.

விண்ணப்பதாரி 2005-04-21 ஆம் திகதியன்றோ அதற்கு முன்போ கிடைக்கக் கூடியவாறு - பொது முகாமையாளர், தேசிய நீர் விநியோக வடிகாலமைப்புச் சபை, த.பெ.இல : 14 கல்கிஸ என்ற முகவரிக்கு தமது விண்ணப்பத்தை அனுப்பிவைக்கவேண்டும்.

### புடவைக் கைத்தொழில் திணைக்களத்தில்...


புடவைக் கைத்தொழில் திணைக்களம் பின்வரும் பதவிகளுக்கு கீழே குறிப்பிடப்பட்ட தகைமை கொண்ட விண்ணப்பதாரர்களிடம் இருந்து விண்ணப்பங்களைக் கோரியுள்ளது.

வரவு - செலவுத் திட்ட உதவியாளர், அபிவிருத்தி உதவியாளர் ஆகிய பதவிகளுக்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன. கல்வித் தகைமையாக அபிவிருத்தி உதவியாளருக்கு விண்ணப்பிப்போர் : அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகம் ஒன்றில் வர்த்தகம், கலை, வியாபார நிர்வாகம், புடவை வடிவமைப்பு தொடர்பான அழகியற் கலை ஆகியவற்றில் பட்டம் பெற்றிருத்தல் வேண்டும். வரவு - செலவுத் திட்ட உதவியாளர் பதவிக்கு விண்ணப்பிப்போர் : அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகம் ஒன்றில் வர்த்தகம், வியாபார நிர்வாகம், வியாபார முகாமைத்துவம், பொருளியல், கணக்கியல், புள்ளி விபரவியல் போன்ற துறைகளில் பட்டம் பெற்றிருத்தல் வேண்டும்.

விண்ணப்பதாரி திணைக்களத்தினால் நடத்தப்படும் நேர்முகப் பரீட்சை ஒன்றின் பின்னரே நியமனம் பெறுவார்.

விண்ணப்பதாரி பதிவுத் தபாலில் விண்ணப்பப் படிவத்தின் தபால் உறையின் இடதுபக்க மேல் மூலையில் விண்ணப்பிக்கும் பதவியைக் குறிப்பிட்டு - பணிப்பாளர், புடவைக் கைத்தொழில் திணைக்களம், இல 15/4 மலே வீதி, கொழும்பு - 02 என்ற முகவரிக்கு 2005.04.27 ஆம் திகதி அன்றோ அதற்கு முன்னரோ கிடைக்கக்கூடியவாறு பதிவுத் தபாலில் அனுப்பி வைக்க வேண்டும்.

# குர்திஷ் இனத் தலைவர் தலபானி ஈராக்கிய ஜனாதிபதியாகத் தெரிவு!



குர்திஷ் இனத் தலைவரான ஜலால் தலபானி ஈராக்கின் புதிய ஜனாதிபதியாக அந்நாட்டு நாடாளுமன்றத்தினால் தெரிவுசெய்யப்பட்டுள்ளார். இதன்மூலம் ஈராக்கில் இதுவரை காலமும் அரசாங்கமொன்றை அமைப்பதற்குத் தடையாக இருந்த முட்டுக்கட்டை நிலை நீங்கியுள்ளது.

ஜலால் தலபானி ஜனாதிபதியாகத் தெரிவு செய்யப்பட்டதனை அறிவிக்கும் நிகழ்வு - சிறையிலுள்ள முன்னாள் ஜனாதிபதி சதாம் ஹுசைன் உட்பட அவரது அரசாங்கத்திலிருந்த, தற்போது சிறையிலுள்ள அனைவருக்கும் தொலைக்காட்சியில் காண்பிக்கப்பட்டது.

இவரைத் தவிர ஷியா பிரிவைச் சேர்ந்த அடெல் அப்துல் - மகிடி மற்றும் சுனி பிரிவைச் சேர்ந்த தற்போதைய இடைக்கால ஜனாதிபதி காசி அல் யாவிர் ஆகியோர் துணை ஜனாதிபதிகளாகத் தெரிவு செய்யப்பட்டனர்.

ஈராக் என்பது தற்போது புதிய நாடு. இதனை சிறுபான்மை மற்றும் பெரும்பான்மை இனத்தவர்கள் எவரும் தமது கட்டுப்பாட்டிற்குள் வைத்திருக்க முடியாது. இந்த நாட்டில் அனைவரும் சமமாகவே நடத்தப்படுவரென, ஈராக் நாடாளுமன்ற சபாநாயகர் ஹாஜிம் அல் ஹசானி தெரிவித்தார்.

புதிய ஜனாதிபதியாகத் தெரிவு செய்யப்பட்ட ஜனாதிபதி தலபானி தெரிவிக்கையில் - தற்போது பிரச்சினைக்குரியதாக உள்ள எமது நாட்டின் பாதுகாப்பை அதிகரிக்கவுள்ளேன். அத்துடன் ஈராக்கில் தாக்குதல் நடத்தும் கிளர்ச்சிவாதிகள் எமது அயல் நாடுகளூடாகவே அத்துமீறி எமது நாட்டுக்குள் வருகின்றனர். எனவே இவர்கள் அத்துமீறி எமது நாட்டுக்குள் வருவதைத் தடுப்பதற்கு அயல் நாடுகள் எமக்கு உதவி செய்யவேண்டும். எமது மக்கள் தற்போது பொறுமையாக உள்ளனர். ஆனால் அவர்களது பொறுமைக்கும் எல்லையுண்டென்பதை அனைவரும் உணரவேண்டும் எனத் தெரிவித்தார்.

இதேவேளை, இன்று ஜனாதிபதியாக தலபானி பதவியேற்கவுள்ள நிகழ்வையும் சிறையிலுள்ள முன்னாள் ஜனாதிபதி சதாம் ஹுசைனுக்கு தொலைக்காட்சி மூலம் காண்பிக்கவுள்ளதாக மனித உரிமைகள் அமைச்சர் பாக்தியார் அமின் தெரிவித்தார்.

இதனிடையே ஈராக்கின் இடைக்காலத் தேசிய சபை, ஈராக்கிற்கான நிரந்தர அரசியலமைப்பை எதிர்வரும் ஓகஸ்ட் 15 ஆம் திகதி தயாரிக்கும். இதனையடுத்து ஈராக்கிற்கான நிரந்தர அரசாங்கம் டிசெம்பர் மாதம் அமைக் கப்படும்.

ஈராக்கில் அரசமைப்பதற்கான முயற்சிகள் இடம்பெற்றுக் கொண்டிருக்கையில், படையினர் மீதான தாக்குதல்களும் இடம்பெற்ற வண்ணமே உள்ளன. நேற்றுமுன்தினம் ஈராக்கிற்கான அல்கொய்டா அமைப்பின் இணையத் தளத்தில் சிரச்சேதம் செய்யப்பட்ட ஈராக்கிய படைவீரர் ஜசீம் மொகமட் ஹிசைன் மகிடி (வயது 20) மற்றும் அமெரிக்க கூட்டணிப்படைகளுடன் செயற்பட்ட ஹிசைன் தாகா ஆகிய இருவரும் சிரச்சேதம் செய்யப்பட்ட நிலையில் காட்டப்பட்டனர்.

## லஞ்ச ஊழலில் நைஜீரியா முதலிடம்!



வாபரா

ஆபிரிக்க நாடுகளில் ஒன்றான நைஜீரியா உலகிலேயே லஞ்ச, ஊழலில் முதலிடத்தைப் பிடித்த நாடாகக் கருதப்படுகிறது. நைஜீரிய ஜனாதிபதி ஒபுசாஞ்சோ ஊழலை ஒழித்துக்கட்ட கடும் நடவடிக்கைகள் எடுத்து வருகிறார். ஊழலுடன் தொடர்புடையவர்களைக் களையெடுக்க சிறப்பு விசாரணைக் குழுவும் அமைக்கப்பட்டது.

இந்தக் குழு தீவிர விசாரணை நடத்தியதால் அந்த நாட்டின் செனட் சபை சபாநாயகர் அடொல்ப் பலம் வாபரா ரூபா 5 கோடி லஞ்சம் வாங்கியது தெரியவந்தது. அவருக்கு லஞ்சம் கொடுத்தது கல்வித்துறை அமைச்சர் பாபியன் ஒபூசி. இதைத் தொடர்ந்து கல்வி அமைச்சர் ஒபூசியை, ஒபுசாஞ்சோ இரண்டு வாரங்களுக்கு முன் பதவிநீக்கம் செய்தார்.

லஞ்சம் வாங்கியதாகப் புகார் கூறப்பட்ட சபாநாயகரை பதவி விலகுமாறு ஜனாதிபதி உத்தரவிட்டார். இதைத் தொடர்ந்து சபாநாயகர் வாபரா பதவி விலகினார். இதேபோல் கடந்த வாரம் வீட மைப்பு அபிவிருத்தி அமைச்சர் லஞ்சப் புகார் காரணமாக பதவி நீக்கம் செய்யப்பட்டதுடன், உயர் பொலிஸ் அதிகாரி ஒருவரும் பதவிநீக்கம் செய்யப்பட்டார்.

லஞ்ச, ஊழலுக்கு எதிரான வேட்டை அங்கு இன்னும் தொடர்கிறது. அடுத்த கட்டமாக 6 எம்.பிக்கள் மீது விசாரணை நடைபெற்று வருகிறது. அந்த எம்.பிக்களும் விரைவில் சிக்குவார்கள் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

லஞ்சப் புகாரில் பதவி விலகிய வாபராவுக்குப் பதிலாக புதிய சபாநாயகராக கென் நமானி எனுகு தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார்.

நமது ஈழநாடு
The Namathu Eezhanadu
The Leading Daily of Tamils' Homeland

# பல்கலைக்கழகம் மூடப்பட்டதை எதிர்த்து நேற்று ஆர்ப்பாட்டம்!

(கொழும்பு)

ஜெயவர்த்தன பல்கலைக்கழகம் மறு அறிவித்தல் வரை மூடப்பட்டுள்ளதற்கு எதிர்ப்புத் தெரிவித்து ஆர்ப்பாட்டம் ஒன்று நேற்று இடம்பெற்றது. இரண்டாயிரத்துக்கும் மேற்பட்ட மாணவர்கள் இந்த ஆர்ப்பாட்டத்தில் பங்கு கொண்டனர்.

எந்தவித காரணமுமின்றி தமது பல்கலைக்கழகம் காலவரையின்றி நேற்றுமுன்தினம் மூடப்பட்டமை தொடர்பாக இந்த ஆர்ப்பாட்டத்தை நடத்தியதாக மாணவர்கள் தெரிவித்தனர்.

மாணவர்களுக்கும் நிர்வாகத்துக்கும் இடையில் ஏற்பட்ட முறுகல் நிலையே இதற்குக் காரணமாக இருப்பினும் வேறு சில காரணங்கள் கூறப்பட்டு சிரேஷ்ட மாணவர்கள் பல்கலைக்கழகத்துக்குச் செல்வது தடைசெய்யப்பட்டிருந் தது.

எனினும் அதனையும் மீறி குறிப்பிட்ட மாணவர்கள் பல்கலைக் கழகத்துக்குச் சென்றமையானது நிர்வாகத்துக்குச் சவால் விடுக்கும் செயலாகும் என்பதால் பிரச்சினை தீர்க்கப்படும் வரை பல்கலைக் கழகத்தை மூடிவிடுவதெனத் தீர்மானித்ததாக பல்கலைக் கழக நிர்வாகம் தெரிவித்தது.

இதேவேளை பேராதனை பொறியியற்பீட மாணவர்களுக்கிடையிலான பிரச்சினை காரணமாக பேராதனை பொறியியற்பீடம் மூடப்பட்டுள்ளது. மூடப்பட்டுள்ள றுகுணு பல்கலைக்கழகமும் இதுவரை திறக்கப்படவில்லை.

இதற்கிடையில் ஊழியர்களுக்கிடையிலான பிரச்சினை காரணமாக இலங்கை திறந்த பல்கலைக் கழகமும் மூடப்பட்டிருப்பது குறிப்பிடத்தக்கது.

(01)

## போராளி படையினரால் கைது கண்காணிப்புக் குழுவிடம் முறைப்பாடு

திருகோணமலை கட்டைபறிச்சான் இராணுவ முகாமில் வைத்து - சயனைட் வில்லைகளை வைத்திருந்ததான குற்றச்சாட்டில் தமது போராளி ஒருவர் கைது செய்யப்பட்டிருப்பது ஒரு யுத்த நிறுத்த மீறல் என்று விடுதலைப் புலிகளின் திருகோணமலை மாவட்ட அரசியற்துறைப் பொறுப்பாளர் எழிலன் முறைப்பாடு செய்துள்ளார்.

போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுவில் அவர் செய்துள்ள முறைப்பாட்டில் - யுத்த நிறுத்த உடன்பாட்டில் சயனைட் வில்லைகளை வைத்திருப்பது ஒரு யுத்த நிறுத்த மீறல் என்று குறிப்பிடப்படவில்லை.

எனவே, இந்தக் காரணத்தினால் போராளி ஒருவரைக் கைது செய்து தடுத்து வைத்திருப்பது ஏற்றுக்கொள்ளக் கூடியதல்ல. இது தொடர்பாக போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுவினர் தலையிட்டு போராளியை விடுவிக்க நடவடிக்கை எடுக்குமாறு எழிலன் முறைப்பாட்டில் கூறியுள்ளார்.

## நித்திரைக்குச் சென்ற இளைஞன் காலையில் சடலமாக மீட்பு!

(மன்னார்)

நள்ளிரவில் நித்திரைக்குச் சென்ற இளைஞன் காலையில் சடலமாக மீட்கப்பட்ட சம்பவம் நேற்று மன்னாரில் இடம்பெற்றது.

மன்னார் - வங்காலையைச் சேர்ந்த பிரான்சிஸ் யூட்டலீமா (வயது-20) என்பவரே சடலமாக மீட்கப்பட்டவராவார்.

நேற்றுமுன்தினம் இரவு 7 மணிக்கு வீட்டிலிருந்து நண்பர்களுடன் செல்வதாகக் கூறிச்சென்ற மேற்படி இளைஞன் முன்னிரவு 11 மணியளவில் வீட்டிற்கு வந்ததாகவும் பின்னர் படுக்கைக்கு சென்ற இவர் காலையில் சடலமாக காணப்பட்டார் எனத் தெரிவித்த குறித்த இளைஞனின் தாயார் - தனது மகனின் உயிரிழப்பில் சந்தேகம் ஏற்பட்டிருப்பதாகவும் கூறியுள்ளார்.

இவரது சடலம் பொலிஸாரால் மீட்கப்பட்டு மன்னார் ஆதார வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. (201)

## துலா முறிந்து வீழ்ந்து இளைஞர் பரிதாபமரணம்

கிளிநொச்சி வட்டக்கச்சி சில்வா வீதியில் நேற்று மாலை இளைஞர் ஒருவர் கிணற்றில் தவறுதலாக வீழ்ந்து பரிதாபகரமாக உயிரிழந்தார்.

நேற்று மாலை 2 மணியளவில் நடந்த இந்தச் சம்பவத்தில் வட்டக்கச்சி சில்வா வீதியைச் சேர்ந்த கிருஷ்ணமூர்த்தி குணசீலன் (வயது-26) என்பவரே உயிரிழந்தவராவார்.

இவர் கிணற்றில் தண்ணீர் அள்ளிக்கொண்டிருந்த வேளை கிணற்றுத் துலா முறிந்ததனால் இவர் தவறி கிணற்றுக்குள் வீழ்ந்து பரிதாபகரமாக உயிரிழந்தார். சம்பவ இடத்துக்குச் சென்ற தமிழீழ காவற்துறையினர் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (09)

## சீனப் பிரதமர் நாளை வருகிறார்

(கொழும்பு)

சீனப் பிரதமர் வென்ஜியாபோ நாளை இலங்கைக்கான விஜயத்தை மேற்கொள்ளவுள்ளார்.

இவர் இலங்கையில் இரண்டு நாட்கள் தங்கியிருந்து இருதரப்பு ஒத்துழைப்பை வலுப்படுத்துவதுடன், பேச்சு வார்த்தையும் நடத்தவுள்ளார்.

அத்துடன் இவர் இலங்கை அரசுடன் ஐந்து முக்கிய ஒப்பந்தங்களில் கைச்சாத்திடவுள்ளார்.

மேலும் இலங்கையில் சுனாமி அனர்த்தத்தால் பாதிப்படைந்த பிரதேசங்களையும் பார்வையிடவுள்ளார்.

## இரு சடலங்களும் அரச செலவில் அடக்கம்

(கொழும்பு)

பொலநறுவ - வெலிக்கந்த தீவுச்சேனைப் பகுதியில் கருணாவின் சகாக்கள் தங்கியிருந்த முகாம் பகுதியில் கடந்த மாதம் 21 ஆம் திகதி இடம்பெற்ற துப்பாக்கிச் சண்டையில் உயிரிழந்த இருவரினதும் சடலங்கள் அரச செலவில் அடக்கம் செய்யப்பட்டன.

மேற்படி இருவரது சடலங்களும்- அடையாளம் காண்பதற்காக பொலநறுவ வைத்தியசாலையில் வைக்கப்பட்டிருந்த போதும், எவரும் உரிமை கோராததால் - பொலிஸார் அரச செலவில் அவற்றைஅடக்கம்செய்தனர்.

கடந்த 4 ஆம் திகதி பொலநறுவ பொது மயானத்தில் இந்தச் சடலங்கள் அடக்கம் செய்யப்பட்டன.

## தனியார் மயப்படுத்தலை தடுக்க சட்டம் கொண்டுவருமாறு ஜே.வி.பி கோருகிறது!

(கொழும்பு)

இலங்கை மின்சாரசபை மற்றும் பெற்றோலியக் கூட்டுத்தாபனம் ஆகியவற்றை மறுசீரமைப்பதற்கு முன்னர் அரச நிறுவனங்களை தனியார் மயமாக்குவதைத் தடைசெய்யும் சட்டம் நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட வேண்டுமென ஜே.வி.பி நிபந்தனை விதித்துள்ளது.

அரச நிறுவனங்களை மறுசீரமைப்பு செய்யும்போது எந்தக் காரணங்களைக்கொண்டும் அவற்றை தனியார்மயப்படுத்த இடமளிக்காத வகையில் சட்டம் இயற்ற அமைச்சரவை அங்கீகாரம் வழங்க வேண்டுமென ஜே.வி.பிதரப்பில் கோரப்பட்டுள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

ஐக்கிய மக்கள் சுதந்திரமுன்னணியின் நாடு முன்னோக்கி என்ற தேர்தல் விஞ்ஞாபனத்தில் அரச நிறுவனங்கள் மறுசீரமைப்பு சம்பந்தமாக குறிப்பிடப்பட்டுள்ளது. எந்த அரசு ஆட்சிக்கு வந்தாலும் மறுசீரமைப்பு என்ற போர்வையில் அரச நிறுவனங்களை தனியார் மயப்படுத்த முடியாத அளவிற்கு சட்டம் இயற்ற வேண்டும் என ஜே.வி.பி.கோரியுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது

(01)

### அடுத்த...

நிலையிலிருக்கும் தளபதியான வசந்த கருணாகொடவை அடுத்த கடற்படைத் தளபதியாக நியமிக்கவே ஜனாதிபதி சந்திரிகா எண்ணியுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை, எதிர்வரும் செப்ரெம்பர் மாதத்துடன் ஓய்வுபெறவிருக்கும் கடற்படைத் தளபதி தயா சந்தகிரி, அதன் பின்னர் பாதுகாப்பமைச்சின் செயலாளராக நியமிக்கப்படலாம் என்று தெரிவிக்கப்படுகிறது.

தற்போதைய பாதுகாப்பமைச்சின் செயலாளராக இருக்கும் மேஜர் ஜெனரல் அசோக ஜெயவர்த்தனவை குறுகிய காலத்துக்கே ஜனாதிபதி சந்திரிகா அந்தப் பதவிக்கு நியமித்தார் என்பதுடன் தொடர்ந்தும் அப்பதவி வகிக்க அவர் விரும்பவில்லை எனவும் தெரிவிக்கப்படுகிறது.

### நிழல்...

ஆரம்பி, எம்மைத் தீண்டாதே எரிந்து போவாய் போன்ற பதாதைகளை ஏந்தியவாறு யாழ் மாவட்ட போர் நிறுத்தக் கண்காணிப்பு குழு அலுவலகத்தை வந்தடைந்தனர்.

இலங்கை போர்நிறுத்த கண்காணிப்புக்குழுத் தலைவருக்கான மகஜரை யாழ்.நல்லூர் கோட்ட பொது அமைப்புக்களின் ஒன்றியத் தலைவர் சிவஞானசுந்தரம் - யாழ் மாவட்ட போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழு பதில் பொறுப்பதிகாரி வோயிற்றோவிடம் கையளித்தார்.

இந்தப் பேரணியில் பெருமளவிலான மக்கள் பங்குபற்றியமை குறிப்பிடத்தக்கது.

### 3 ஆயிரத்து...

ஆகிய பாடங்களில் சித்திபெற்ற மாணவர்களின் எண்ணிக்கையில் அதிகரிப்பு ஏற்பட்டிருப்பதாக பரீட்சை ஆணையாளர் நாயகம் மகிந்த விஜயசிறி தெரிவித்தார்.

முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும்போது ஆங்கில பாடத்தில் சித்தியடைந்தவர்களின் எண்ணிக்கை 13 சதவீதத்தாலும், கணித பாடத்தில் சித்தியடைந்தவர்களின் எண்ணிக்கை 3 சதவீதத்தாலும் உயர்ந்துள்ளது.

### பொலிஸ்...

தெரிவிக்கப்படுகிறது.

தாக்குதலை நடத்தியவர்கள் பாதுகாப்பில் ஈடுபட்டிருந்த இரண்டு பொலிஸாரினதும் ரி-56 ரக துப்பாக்கிகளையும் அபகரித்துச் சென்றிருப்பதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

இந்தத் தாக்குதலை அடுத்து விசேட அதிரடிப்படையினர் அப்பகுதியில் தேடுதல்களை நடத்தியபோதும்- எவரும் கைது செய்யப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

### இலங்கையின் வறுமை...

இலங்கை ஆகிய நாடுகள் மீண்டெழுவதற்கு நீண்டகாலம் எடுக்கும். இதில் இந்தோனேஷியா மீண்டெழுவதற்கு மிகநீண்ட காலம் எடுக்கும். சுனாமியால் பெருமளவில் உயிர், உடைமை இழப்புக்கள், இடப்பெயர்வுகள் ஏற்பட்டுள்ளன.

இதனால், இலங்கையின் பொருளாதார வளர்ச்சி மட்டுப்படுத்தப்பட்டதாகவே இருக்கும்.

சுனாமியால் பாதிக்கப்பட்ட மக்கள் தமது பழைய நிலைக்குச் செல்வதற்கு நீண்ட காலமெடுக்கும். சுனாமியால் பாதிக்கப்பட்ட மக்களுக்கான உதவிப் பொருட்கள், ஊழலற்ற வகையில் விநியோகிக்கப்படும் வகையில் அரசாங்கம் பார்த்துக்கொள்ளவேண்டும்.

சுனாமி அனர்த்தத்தை அடுத்து கடந்த ஆண்டு 5.5 வீதமாக இருந்த இலங்கையின் பொருளாதார வளர்ச்சி வீதம் இந்த வருடம் 5.2 வீதமாகக் குறைவடையும். சுனாமி மீள்கட்டுமானப் பணிகள் - வெளிநாட்டு நிதியுதவிகள் மூலம் மேற்கொள்ளப்படுமென எதிர்பார்க்கப்படும் நிலையில், இலங்கையிலிருந்து ஐரோப்பிய யூனியன் நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்படும் பொருட்களின் அளவுகளில் தளம்பல் நிலை ஏற்படும்.

மீள்கட்டுமானத்திற்கான ஊழியர் பற்றாக்குறை மற்றும் மீள்கட்டுமானத்திற்குத் தேவையான பொருட்களின் விலை அதிகரிப்பு என்பவற்றால் கடந்த வருட இறுதியில் 7.6 வீதமாக இருந்த பணவீக்கம், இந்த வருட இறுதியில் 12 வீதமாக அதிகரிக்கும்.

எனினும், 2006 ஆம் ஆண்டு இந்த பணவீக்கம் 9 வீதமாகவும் 2007 ஆம் ஆண்டு 7.5 வீதமாகவும் குறை வடைந்து காணப்படுமெனவும் வங்கி தனது அறிக்கையில் தெரிவித்துள்ளது.

## மரண அறிவித்தல்



### சுப்பையா பொன்னுத்துரை

(உரிமையாளர் பொன்மலர் ஸ்ரோஸ் அளவை கொன்வெக்சனறி வேக்ஸ் (SUN BRAND) அளவெட்டி)

அளவெட்டி வடக்கு பெத்தாவளையைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட சுப்பையா பொன்னுத்துரை நேற்று (06-04-2005) காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற சுப்பையா நாகம்மா தம்பதிகளின் அன்பு மகனும், தர்மலிங்கம், காலஞ்சென்ற நல்லம்மா தம்பதிகளின் அன்பு மருமகனும், சகுந்தலாதேவியின் அன்புக் கணவரும், மரைவன் (கனடா), பிரதீபா (2002 A/L யாழ்ப்பாணக் கல்லூரி), கேகவன் (2005 A/L Maths மகாஜனா கல்லூரி), தேசிகரன் (நோர்வே) ஆகியோரின் அன்புத் தந்தையும், கணேசமூர்த்தி (ஓய்வுபெற்ற கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் யாழ்ப்பாணம்), காலஞ்சென்ற இராஜேஸ்வரி, சரஸ்வதி, சத்தியவதி, பாலச்சந்திரன், யோகவதி (கனடா), தர்மசீலன் (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புச் சகோதரனும், சண்முகாதேவி, செல்வராசா, சின்னத்துரை, ஆனந்தஜோதி, ஜெயமலர், சத்தியானந்தன் (கனடா), சங்கீதா (பிரான்ஸ்) ஆகியோரின் மைத்துனரும், ஶ்ரீஸ்கந்தராசா (நோர்வே), ரதிமலர் (கிளிநொச்சி), வளர்மதி (ஜேர்மனி), எதிர்வீரசிங்கம் (ஜேர்மனி) ஆகியோரின் மைத்துனரும், தவராணி (நோர்வே), கேதீஸ்வரன் (உபதபால் அதிபர் கிளிநொச்சி), கிருஸ்ணகுமார் (ஜேர்மனி), கோமதி (ஜேர்மனி) ஆகியோரின் சகலனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் பற்றிய விபரம் பின்னர் அறிவிக்கப்படும்.

T.P.0602-212558
0773-024376
பண்டத்தரிப்பு வீதி,
அளவெட்டி வடக்கு, அளவெட்டி. (1112)

தகவல் -
பொ.சகுந்தலாதேவி
(மனைவி)

தமிழீழ தேசிய தொலைக்காட்சிக்கான
ஆளணி வேண்டுகைகள்

தமிழீழ தேசிய தொலைக்காட்சி சேவையில்
பணிபுரிவதற்கான வேண்டுகைகள்
கோரப்படுகின்றன.

- செய்தி வாசிப்பாளர்
- நிகழ்ச்சி அறிவிப்பாளர்
- நிகழ்ச்சித் தயாரிப்பாளர்
- நிகழ்ச்சித் தொகுப்பாளர்

ஆண், பெண் இருபாலாரும்
விண்ணப்பிக்கலாம்
தகைமைகளுக்கு அமைய
கொடுப்பனவு வழங்கப்படும்

விண்ணப்பங்களை :
விளம்பர இல :37
'நமது ஈழநாடு'
267, நாவலர் வீதி யாழ்ப்பாணம்.
என்ற முகவரிக்கு 15.04.2005 இற்கு முன்
அனுப்பி வைக்கவும்.
நிர்வாகி, தமிழீழ தேசிய தொலைக்காட்சி.

இப்பத்திரிகை இல.267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள நமது ஈழநாடு அச்சகத்தில் 07.04.2005 அன்று பொன்னுத்துரை குருதேவ் அவர்களால் அச்சிட்டு வெளியிடப்பட்டது.